இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு கூறியபோது, "தபால் வாக்கு செலுத்த விருப்பம் தெரிவித்து 12-டி படிவத்தை பூர்த்தி செய்து அளித்தவர்கள் வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க இயலாது. படிவத்தை பூர்த்தி செய்து அளிக்காதவர்கள், பூர்த்தி செய்து அளித்தும் தேர்தல் நடத்தும் அலுவலரால் அனுமதிக்கப்படாதவர்கள் தேர்தல் நாளில் வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்கலாம். தபால் வாக்கு பெறுவதற்காக சம்பந்தப்பட்ட வாக்காளரின் வீட்டுக்கு அலுவலர்கள் வரும்போது, வீடு பூட்டியிருந்தால் 2-வது முறை வருவார்கள். அவர்கள் வரும்போது வீட்டில் இருந்து வாக்கை பதிவு செய்யலாம். ஏப்ரல் 18-ம் தேதி வரை இப்பணி நடைபெறும்" என்றார்.

தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு, மாநில தேர்தல் செலவின பார்வையாளர் பி.ஆர்.பால கிருஷ்ணன் ஆகியோர், அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல் கண்காணிப்பாளர்களுடன் தேர்தல் முன்னேற்பாடு குறித்து நேற்று மாலை ஆலோசனை நடத்தினர். இதில், கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி சங்கர்லால் குமாவத், இணை தலைமை தேர்தல் அதிகாரி ஸ்ரீகாந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஏப்.19-ம் தேதி பொது விடுமுறை: அரசு அறிவிப்பு

● சென்னை

தமிழகத்தில் வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்ரல் 19-ம் தேதி பொது விடுமுறை அறிவித்து தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா உத்தரவிட்டுள்ளார்.

மக்களவை தேர்தலுக்கான தேதியை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 16-ம் தேதி அறிவித்தது. அதன்படி நாடு முழுவதும் 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இதில் முதல்கட்டமாக, தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் ஏப்ரல் 19-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதையடுத்து, செலாவணி முறி சட்டத்தின்படி தமிழகத்தில் வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்ரல் 19-ம் தேதி பொது விடுமுறை விடப்படுவதாக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

Election officers Started Receiving postal vote from 85+ and pwDs

இந்து தமிழ் திசை

- 5 APR 2024

### தேர்தல் விதிமீறல்கள் குறித்து குறைந்த அளவிலான புகார்

# தமிழகத்தில் இன்னும் பிரபலமாகாத 'சி விஜில்' செயலி

**நாடுமுழுவதும் 1.26 லட்சம் புகார்கள் பதிவானதாக தகவல்**

● சென்னை

தேர்தல் விதிமீறல் தொடர்பான நிகழ்நேர புகார்களை 'சி விஜில்' செயலி மூலம் பொதுமக்கள் அதிகளவில் அளிக்க வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகம் சட்டம் -ஒழுங்கு விவகாரத்தில் பிரச்சினை இல்லாத மாநிலமாக இருந்தாலும், முந்தைய தேர்தல்களில் அதிகளவில் பணம், பரிசுப் பொருட்கள் பிடிபட்ட காரணத்தால், செலவினம் தொடர்பான முக்கியத்துவம் மிகுந்த மாநிலமாக இந்திய தேர்தல் ஆணையம் கருதுகிறது. இதைமுன்னிட்டு, வாக்குக்கு பணம், பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதை கண்காணித்து நடவடிக்கை எடுக்க பல்வேறு ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், சில குறிப்பிட்ட தொகுதிகளுக்கு 2 செலவின பார்வையாளர்களை ஆணையம் நியமித்துள்ளதுடன், அனைத்து தேர்தல் செலவினம் தொடர்பான பணிகளையும் கண்காணிக்க ஓய்வு பெற்ற ஐஆர்எஸ் அதிகாரி பி.ஆர். பாலகிருஷ்ணனை நியமித்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க, தேர்தல் நடத்தை விதிகள் மீறல், பணம், பரிசுப்பொருட்கள் வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொது மக்கள் புகார் அளிக்க உருவாக்கப்பட்டுள்ள 'சி விஜில்' செயலியில் வரும் புகார்களுக்கு தேர்தல் ஆணையம் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இந்த செயலியில் வரும் புகார்கள் நிகழ்நேர பதிவுகளாக இருப்பதால், அவற்றின் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கடந்த மார்ச் 16 முதல் தற்போது வரை தமிழகத்தில் 2,168 புகார்கள் பெறப்பட்டு 2,139 புகார்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன. இதில் 1,071 புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதம் 29 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய அளவில் ஒப்பிடும்போது தமிழகத்தில் குறைவான புகார்களே பதிவாகின்றன. எனவே, தேர்தல் விதிமீறல் தொடர்பான நிகழ்நேர புகார்களை 'சி விஜில்' செயலி மூலம் தமிழக மக்கள் அதிகளவில் அளிக்க வேண்டும்

நாடு முழுவதும் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 1 லட்சத்து 25,939 புகார்கள் பெறப்பட்டு, 1 லட்சத்து 25,551 புகார்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக கேரளாவில் 71,168 புகார்கள் பெறப்பட்டு 70,929-க்குதீர்வு காணப்பட்டுள்ளது. இதில் 67,128 புகார்கள் மீது 100 நிமிடங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த இடத்தில் ஜார்க்கண்டில் 14,684 புகார்களும், கர்நாடகாவில் 13,959 புகார்களும் பதிவாகியுள்ளன.

இதுதவிர, புகார் அளித்தவர் பெயர் விவரங்கள் வெளியிடப்படுவதில்லை. எனவே, பொதுமக்கள் பயமின்றி தாங்கள் காணும் விதிமீறல்களை சி விஜில் செயலியில் பதிவு செய்து, விவரங்களை அளித்தால், உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.

News article regarding cvigil app did not get popular among people & only 1.26 lakhs complaints were received. from all over India.

இந்து தமிழ் திசை

5 APR 2024

# ஈவிஎம் குறைபாடு களைய திமுக தொடர்ந்த வழக்கில் இணைய காங்கிரஸ் மனு

● சென்னை

சென்னை உயர் நீதிமன்றத்தில் திமுக அமைப்புச் செயலாளரான ஆர்.எஸ்.பாரதி ஏற்கெனவே தாக்கல் செய்திருந்த மனுவில், ஜனநாயக ரீதியில் முறைகேடுகள் இல்லாத நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் கட்டுப் பாட்டு இயந்திரத்துக்கு நடுவில் ஒப்புகை சீட்டு இயந்திரத்தை இணைக்கக்கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும், எனக்கோரி உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள் ளார்.

இந்நிலையில் இந்த வழக்கில் தன்னையும் ஒரு மனுதாரராக இணைக்கக்கோரி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநிலத் தலை வர் கு.செல்வப்பெருந்தகை மனு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வர வுள்ளன.

Case files by DMK party, regarding EVMs of Congress will joint hand with DMK party for this ~~case~~ case.

தினத்தந்தி

- 5 APR 2024

**நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் தீவிரம்**

## தென்சென்னை, மதுரை தொகுதிகள் உள்பட தமி

# 8 ஆயிரம் வாக்குச்சாவடிகள் பதற்றமா




சென்னை தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு, சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளர் பி.ஆர்.பாலகிருஷ்ணன் ஆகியோர் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், போலீஸ் சூப்பிரண்டுகளுடன் காணொலி மூலம் ஆலோசனை நடத்தியபோது எடுத்தபடம்.

## தலைமை தேர்தல் அதிகா

நாடாளுமன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. தென்சென்னை, மதுரை தொகுதிகள் உள்பட தமிழ்நாட்டில் 8 ஆயிரம் வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என்று தலைமைதேர்தல் அதிகாரிதெரிவித்துள்ளார்.

சென்னை, ஏப்.5-

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு, சென்னைதலைமைச் செயலகத்தில் நிருபர் களுக்கு நேற்று பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

### ரோடு ஷோ அனுமதி

நாடாளுமன்ற தேர்தலை யொட்டி அனைத்து மாநில தலைமைச் செயலர்கள், போலீஸ் டி.ஜி.பி.க்கள், ம தலைமைதேர்தல் அதிகா உள்துறைச் செயலாள மற்றும் முக்கிய அலுவல டன் இந்திய தலைமை தல் கமிஷனர் ராஜீவ்கு வீடியோ கான்பரன் மூலம் ஆலோசனை ந னார். அப்போது பக் மாநிலங்களுடன் ஒரு ணைந்து தேர்தல் பணிக செய்வது பற்றியும், தே முன்னேற்பாடுகள் பற் ஆலோசனை வழங்கின

வேட்பாளர்கள் தங்க

## 8 ஆயிரம் வாக்குச்சாவடிகள்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

கொள்ள முடியும். 'ரோடு ஷோ' நிகழ்ச்சிகளுக்கான அனுமதிகளை, தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற வேண்டும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக பிரதமருக்கு மட்டும் சில விதிவிலக்கு உள்ளது. அது தவிர்த்து மற்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்கனவே உள்ள நடைமுறையே பின்பற்றப்படுகிறது. ரோடு ஷோவுக்கு நட்சத்திர பேச்சாளர்கள் பயன்படுத்தும் வீடியோ வகை வாகனங்களுக்கான அனுமதியை தேர்தல் கமிஷன் வழங்கும். மற்ற வாகனங்களுக்கான அனுமதியை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம்தான் பெறவேண்டும்.

### ஆரத்திக்கு பணம்

வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களுக்கு மட்டுமே பூத் சிலிப் வழங்கப்படுகிறது. இதுவரை 13.08 லட்சம் பூத் சிலிப்கள் வழங்கப்பட்டுள்ளன. ஓட்டுப்பதிவு தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக மாதிரி வாக்குப்பதிவு நடைபெறும். இதில் அரசியல் கட்சிகளின் முகவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அதில் அதிகபட்சம் 50 ஓட்டுக்களை பதிவு செய்யலாம்.

ஓட்டுக்கு பணம் கொடுப்பதை தடுக்க, தேர்தல் கமிஷன் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாக விழிப்புணர்வு பாடல் அடங்கிய ஆடியோ கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது. தற்போது அதே பாடல், வீடியோவாக வெளியிடப்பட்டுள்ளது.

கோவை பா.ஜனதா வேட்பாளர் அண்ணாமலை, ஆரத்திக்கு பணம் கொடுத்ததாக வந்த வீடியோ, கடந்த ஜனவரி மாதத்தில் நடந்த பழைய சம்பவம் என்று அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் இருந்து வந்த புகார் மீது விசாரணை நடைபெறுகிறது. ஓட்டுக்கு பணம் கொடுத்ததாக இதுவரை வேறு புகார்கள் இல்லை.

### 8 ஆயிரம் வாக்குச்சாவடிகள் பதற்றமானவை

தமிழகத்தில் மொத்தம் 68 ஆயிரத்து 320 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. அதில் 8 ஆயிரத்து 50 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக மதுரை தொகுதியில் 511 வாக்குச்சாவடிகளும், தென்சென்னையில் 456 வாக்குச்சாவடிகளும், தேனியில் 381 வாக்குச்சாவடிகளும் பதற்றமானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. திருவள்ளூர் தொகுதியில் 170, வடசென்னையில் 254, மத்திய சென்னையில் 192, ஸ்ரீபெரும்புதூரில் 337, காஞ்சிபுரத்தில் 371 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என அறியப்பட்டுள்ளன.

பதற்றமான ஓட்டுசாவடிகளுக்கு, வாக்குப்பதிவுக்கு ஒரு நாள் முன்னதாகவே துணை ராணுவம் அனுப்பி வைக்கப்படும். மேலும் சி.சி.டி.வி. கேமரா பொருத்துவது உள்ளிட்ட கூடுதல் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

பதற்றம் குறைந்த ஓட்டு சாவடிகள் உள்ள தொகுதிகளாக பெரம்பலூர் (55 ஓட்டு சாவடிகள்), விழுப்புரம் (76 ஓட்டு சாவடிகள்), திருச்சி (84 ஓட்டு சாவடிகள்) அடையாளம் காணப்பட்டுள்ளன.

### மிகப்பதற்றமான வாக்குச்சாவடிகள்

கடந்த தேர்தலில் 90 சதவீதத்துக்கு மேல் ஓட்டுப் பதிவாகி, அதில் 75 சதவீத் ஓட்டுகள் ஒருவாக்காளருக்கு சென்றிருந்தால், அதுபோன்ற வாக்குச்சாவடிகள் மிகப்பதற்றமான வாக்குச்சாவடிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதன்படி தமிழகத்தில் 181 வாக்குச்சாவடிகள் மிகப் பதற்றமானவை என்று கண்டறியப்பட்டுள்ளன.

அதில் அதிகபட்சமாக திண்டுக்கல் தொகுதியில் 39 வாக்குச்சாவடிகளும், வடசென்னையில் 18 வாக்குச்சாவடிகளும், அரக்கோணம் தொகுதியில் 15 வாக்குச்சாவடிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

திருவள்ளூர் தொகுதியில் 5 வாக்குச்சாவடிகள் மிகப் பதற்றமானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

### தபால் ஓட்டு

தமிழகத்தில் மொத்தமுள்ள 6.23 கோடி வாக்காளர்களில் 85 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வாக்காளர்கள் 6 லட்சத்து 14 ஆயிரத்து 2 பேர் உள்ளனர். மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் 4 லட்சத்து 61 ஆயிரத்து 771 பேர் உள்ளனர். அவர்கள் 12-டி படிவத்தை பயன்படுத்தி வீட்டில் இருந்தபடி தபால் ஓட்டு போடுவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் கமிஷன் செய்திருந்தது.

அதற்கு விருப்பம் தெரிவித்து 85 வயதுக்குமேற்பட்ட வாக்காளர்கள் 4.30 லட்சம் பேரும், மாற்றுத்திறனாளிகள் 3.66 லட்சம் பேரும் விண்ணப்பம் பெற்றனர். பூர்த்தி செய்த படிவங்களை 85 வயதுக்கு மேற்பட்ட 77 ஆயிரத்து 455 பேரும், மாற்றுத்திறனாளிகள் 50 ஆயிரத்து 676 பேரும் ஒப்படைத்துள்ளனர். இவர்கள் வீட்டில் இருந்தே வாக்குப் பதிவு செய்யலாம்.

### கோவை, திருச்சியில் தொடங்கியது

அந்த வகையில் முதியவர்களிடம் வீடுகளுக்கு சென்று ஓட்டுகளை பெறும் நடவடிக்கை, திருச்சி, ஈரோடு, கோவை தொகுதிகளில் தொடங்கியுள்ளது. அவர்கள் வீடுகளுக்கு ஒரு போலீஸ் அதிகாரி, கட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி அலுவலர் மற்றும் கண்காணிப்பு அதிகாரி ஆகியோர் சென்று வாக்குகளை பெற்று வருகின்றனர்.

அதற்காக அவர்கள் வீட்டிலேயே தற்காலிக வாக்குசாவடி உருவாக்கப்பட்டு, அதில் வாக்குப்பெட்டி வைக்கப்பட்டு வாக்கு செலுத்துகின்றனர்.

அலுவலர்கள் எண்ணிக்கை அதிகமாக இல்லை என்பதால் ஒரே நாளில் தொகுதி முழுவதும் இப்படி வாக்கைப்பெற முடியாது. முதல்முறை வீட்டுக்கு அலுவலர்கள் செல்லும்போது, வாக்காளர் இல்லையென்றால் மேலும் ஒருமுறை ஓட்டுப் பதிவு அலுவலர்கள் செல்வார்கள். அதற்கு மேல் வாய்ப்பு கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.

| பதற்றமான வாக்குச்சாவடிகள் | |
|---|---|
| மொத்த வாக்குச்சாவடிகள் | - 68,320 |
| பதற்றமானவை | - 8,050 |
| மிகவும் பதற்றமானவை | - 181 |

| சென்னையில் பதற்றமான வாக்குச்சாவடிகள் விவரம் | |
|---|---|
| தென்சென்னை | - 456 |
| வடசென்னை | - 254 |
| மத்திய சென்னை | - 192 |

CEO TN informs that 8000 polling booths were identiby as vulnerable polling booths.

தினத்தந்தி
5 APR 2024



வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்திய நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் முன்பு தொண்டர்கள் திரண்டிருந்தபோது எடுத்தபடம்.

நெல்லையில்

# மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வருமானவரி சோதனை

## தொண்டர்கள் திரண்டதால் பரபரப்பு

நெல்லை, ஏப்.5-
நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வருமானவரி அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். அங்கு தொண்டர்கள் திரண்டதால் பரபரப்பு நிலவியது.

### நாடாளுமன்ற தேர்தல்

நாடாளுமன்ற தேர்தலையொட்டி, வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில், பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனை நடத்தி கண்காணித்து வருகின்றனர்.

வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர் பணம் பட்டுவாடா செய்வதை தடுக்கும் வகையில், கடந்த சில நாட்களாக வருமான வரித்துறையினர் பல்வேறு இடங்களில் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். அரசியல் கட்சி பிரமுகர்களின் வீடுகள், அலுவலகங்களிலும் சோதனை மேற்கொள்கிறார்கள்.

### வருமானவரி அதிகாரிகள்

இந்த நிலையில் மதுரை வருமான வரித்துறை உதவி ஆணையர் ராஜேந்திரன் தலைமையிலான 5 பேர் கொண்ட குழுவினர் நேற்று மாலையில் பாளையங்கோட்டை மகாராஜநகரில் உள்ள நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்திற்கு காரில் வந்தனர். அவர்கள் திடீரென அலுவலகத்திற்குள் சென்று சோதனை நடத்தினார்கள்.

அப்போது முன்னாள் சபாநாயகரும், கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான ஆவுடையப்பன் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டு இருந்தார். இதில் அப்துல் வகாப் எம்.எல்.ஏ. உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

### தி.மு.க.வினர் திரண்டனர்

தி.மு.க. மாவட்ட அலுவலகம் முழுவதும் சோதனை நடத்திய வருமான வரித்துறை அதிகாரிகள், .அங்கிருந்த மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன், அப்துல் வகாப் எம்.எல்.ஏ. உள்ளிட்ட சிலரிடம் தனி அறையில் வைத்து விசாரணை நடத்தினர். இதையடுத்து அங்கு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, இந்த சோதனை குறித்து தகவல் அறிந்த தி.மு.க. நிர்வாகிக்ள், தொண்டர்கள் அலுவலகம் முன்பு திரண்டனர். அவர்கள் மத்திய பா.ஜனதா அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதால் பரபரப்பு நிலவியது.

### ஏதேனும் சிக்கியதா?

சுமார் 1½ மணி நேரத்துக்கும் மேலாக சோதனை நடத்திய வருமான வரித்துறை அதிகாரிகள் இரவு 8.15 மணியளவில் சோதனையை முடித்து வெளியே வந்தனர். அவர்களிடம் சோதனையில் பணம் அல்லது ஆவணங்கள் ஏதேனும் சிக்கி உள்ளதா? என நிருபர்கள் கேட்டனர். அதற்கு அவர்கள் பதில் எதுவும் கூறாமல் காரில் ஏறி புறப்பட்டுச் சென்றனர்.

இந்த சோதனை குறித்து நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆவுடையப்பன் கூறுகையில், "அதிகாரிகள் வந்து அலுவலகத்தில் சோதனை நடத்தினார்கள். ஆனால், இங்கிருந்து அவர்கள் எதுவும் எடுத்துச்செல்லவில்லை'' என்றார்.

IT Dept raid at DMK office

தினத்தந்தி

5 APR 2024



# தபால் ஓட்டுபோட்ட 96 வயது மூதாட்டி

நாடாளுமன்ற தேர்தலில் 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 40 சதவீதம் பாதிப்புள்ள மாற்றுத்திறனாளிகள் வீட்டில் இருந்தபடியே தபால் ஓட்டு மூலம் வாக்களிக்கும் நடைமுறையை இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தி உள்ளது. அதன்படி, புதுச்சேரி திருநள்ளாறு பண்டாரவடை பகுதியை சேர்ந்த 96 வயது மூதாட்டி ஆரியமுத்து என்கிற கலா வயது முதிர்வு காரணமாக நடக்க முடியாமல் வீட்டிலே படுத்த படுக்கையாக உள்ளார். அவரது வீட்டுக்கு சென்ற தேர்தல் குழுவினர், உரிய ஆவணங்களை சரிபார்த்து மூதாட்டி தபால் ஓட்டுபோட ஆவணங்களை வழங்கினர்.

அதனை அவரது குடும்பத்தினர் பூர்த்தி செய்தனர். மூதாட்டி கையெழுத்துபோட வேண்டிய இடத்தில் அவர் தனது கைரேகையை படுக்கையில் படுத்தபடியே பதிவு செய்தார். பின்னர் அவரது குடும்பத்தினர் உதவியுடன் மூதாட்டி தனது வாக்குக்கான படிவத்தை வாக்குப்பதிவு பெட்டியில் போட்டு ஜனநாயக கடமை நிறைவேற்றினார்.

96 old woman were casting thru postal vote at Door Step.

தினத்தந்தி

- 5 APR 2024

நாடாளுமன்ற
தேர்தல் நடைபெறும்

# 19-ந் தேதி பொது விடுமுறை நாள்

## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஏப்.5-
தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள 19-ந் தேதியை பொது விடுமுறை நாளாக அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தமிழகத்தில் 39 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு தேர்தலும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு இடைத் தேர்தலும் வரும் 19-ந் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறும் என்று இந்திய தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

அதற்கான அறிவிப்பாணையை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளதால், அந்த தேதியை பொது விடுமுறை நாளாக சட்டப்படி அறிவிக்க வேண்டும். அதன்படி, வரும் 19-ந் தேதியை பொதுவிடுமுறை நாளாக அறிவித்து கவர்னர் உத்தரவிட்டு உள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

Tamil Nadu govt announces 19th as public holiday

தினத்தந்தி

5 APR 2024

# பறக்கும் படை சோதனையில் சந்தன கட்டைகள் பறிமுதல்

தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி பென்னாகரம் ரோட்டில் சிட்லகாரம்பட்டி அருகில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டனர். பென்னாகரத்தில் இருந்து மாரண்டஅள்ளி சென்ற தனியார் பஸ்சை நிறுத்தி சோதனை செய்தனர். ஒவ்வொரு பயணிகளும் வைத்திருந்த பைகள், உடைமைகளை அங்குலம் அங்குலமாக சோதனையிட்டனர். அப்போது அந்த பஸ்சில் பயணம் செய்த பென்னாகரம் அருகே போடூர் கிராமத்தைச் சேர்ந்த தங்கராஜ் (வயது 19) என்பவர் வைத்திருந்த பையில் சிறு சிறு சந்தன கட்டைகள் இருந்தன. இதனை பறிமுதல் செய்த அதிகாரிகள் எடை பார்த்தனர். அந்த சந்தன கட்டைகள் 3½ கிலோ எடை இருந்தது. அதனை பறிமுதல் செய்த அதிகாரிகள் அதனை கொண்டுவந்த தங்கராஜை கைது செய்தனர்.

Sandal woods were seized by flying Squad.

தினத்தந்தி
- 5 APR 2024

இந்தியா முழுவதும்

# தேர்தல் விதிமீறல் தொடர்பாக 1.25 லட்சம் புகார்கள் பதிவு

சென்னை, ஏப்.5-

இந்தியா முழுவதும் நாடாளுமன்ற தேர்தலை 7 கட்டங்களாக இந்திய தேர்தல் கமிஷன் நடத்த உள்ளது. முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் 19-ந்தேதி நடைபெறவுள்ளது. தேர்தல் நடைபெறும் காலகட்டத்தில், எந்தப் பகுதியிலும் தேர்தல் நடத்தை விதிகளை மீறப்படுவதை படம் பிடித்து தேர்தல் கமிஷனுக்கு மக்கள் வழங்குவதற்காக சி-விஜில் என்ற செல்போன் செயலியை தேர்தல் கமிஷன் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.

தேர்தல் நடத்தை விதிமீறலை அந்த செயலி வழியாக புகைப்படமோ அல்லது வீடியோ படமோ எடுத்து தேர்தல் கமிஷனுக்கு புகாராக (பெயர், ஊர் கூறாமலேயே) அனுப்பி விடலாம். அப்படி அனுப்பப்படும் புகார்களுக்கு 100 நிமிடங்களுக்குள் தீர்வு காணப்படும்.

அந்தவகையில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கடந்த 3-ந்தேதி வரை பதிவு செய்யப்பட்ட புகார்கள் பற்றிய விவரங்களை தேர்தல் கமிஷன் நேற்று வெளியிட்டது.

இந்தியா முழுவதும் அதிகபட்சமாக 1 லட்சத்து 25 ஆயிரத்து 939 புகார்கள் பெறப்பட்டன. அவற்றில் 1 லட்சத்து 25 ஆயிரத்து 551 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில், 1 லட்சத்து 13 ஆயிரத்து 481 புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் தீர்வு காணப்பட்டது. 388 புகார்கள் விசாரணையில் உள்ளன.

அதிகபட்சமாக கேரளாவில் 71 ஆயிரத்து 168 புகார்கள் பெறப்பட்டு அவற்றில் 70 ஆயிரத்து 929 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. லடாக், மிசோரம், நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் ஒரு புகார்களும் பதிவு செய்யப்படவில்லை. குறைந்தபட்சமாக மேகாலயாவில் 6 புகார்கள் பதிவு செய்யப்பட்டன.

1.25 were complaints were received from all over india by Cvigil app

தினத்தந்தி
1-5 APR 2024

காசிமேட்டில் தேர்தல் பறக்கும் படை சோதனை

# மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபரிடம் ரூ.7½ லட்சம் தங்க நகைகள் பறிமுதல்

ராயபுரம், ஏப்.5-
காசிமேட்டில் தேர்தல் பறக்கும் படை சோதனையில் மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபரிடம் இருந்து ரூ.7½ லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

## பறக்கும் படை சோதனை

தமிழகத்தில் வருகிற 19-ந்தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுகிறது. வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்க தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அதன்படி சென்னை காசிமேடு கும்மாளம்மன் கோவில் சந்திப்பு பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி தனராஜ் தலைமையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபரை நிறுத்தி சோதனை செய்தனர்.

## ரூ.7½ லட்சம் தங்க நகைகள்

அவர் வைத்திருந்த பையை திறந்து பார்த்தபோது அதில் தங்க நகைகள் இருப்பது தெரியவந்தது. விசாரணையில் அவர், மணலி சின்னசேக்காடு பகுதியை சேர்ந்த ராஜாசிங் (வயது 30) என்பதும், எண்ணூர் பகுதியில் உள்ள தனியார் வங்கியில் நகைகள் அடகு வைக்கும் வேலை செய்து வருவதும் தெரிந்தது.

அந்த நகைகளை எண்ணூர் கிளையில் இருந்து ராயபுரத்தில் உள்ள வங்கி கிளையில் வைப்பதற்காக எடுத்து செல்வதாக கூறினார். ஆனால் அந்த தங்க நகைகளுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் அவர் கொண்டு வந்த ரூ.7½ லட்சம் மதிப்புள்ள 129.5 கிராம் தங்க நகைகளை பறிமுதல் செய்தது அரசு கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

## ரூ.2½ லட்சம் சில்லறை காசுகள்

இதேபோல் நாடாளுமன்ற தேர்தலை ஒட்டி சுங்கத்துறையிலும் பறக்கும் படை அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். அதன்படி மண்ணடி ராஜாஜி சாலையில் சுங்கத்துறை அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த சீனு, முருகேசன் ஆகிய 2 பேரை மடக்கி, அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்தனர். அதில் பாக்கெட்டுகளில் சில்லறை காசுகள் இருந்தது. அவற்றுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் அவர்கள் கொண்டு வந்த ரூ.1, 2, 5 மற்றும் 10 ரூபாய் நாணயங்களாக மொத்தம் ரூ.2½ லட்சத்தை பறிமுதல் செய்து தேர்தல் பறக்கும் படை அதிகாரி பாபுவிடம் ஒப்படைத்தனர்.

Worth of Rs 7½ lakhs were seized by flying Squad.

தினத்தந்தி

- 5 APR 2024

ஈரோட்டில் பறக்கும் படை சோதனையில்

# ரூ.38¾ கோடி தங்க நகைகள் பறிமுதல்

ஈரோடு, ஏப்.5-

ஈரோடு மாவட்டம் பவானி லட்சுமி நகர் பகுதியில், தேர்தல் பறக்கும் படையினர் நேற்று வாகனசோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக, 'சீக்யூள் லாஜிஸ்டிக்' என்ற நிறுவனத்தின் பணம், நகை கொண்டு செல்லும் பாதுகாப்பு வாகனம் வந்தது. அதனை தடுத்து நிறுத்தி அதிகாரிகள் சோதனை செய்தனர். இதில் அந்த வாகனத்தில், ரூ.38 கோடியே 71லட்சம் மதிப்பிலான தங்க நகைகள் இருப்பது தெரியவந்தது. வாகனத்தில் இருந்தவர்களிடம் விசாரித்தபோது, 'ஆர்டரின் பேரில் செய்யப்பட்டு வழங்குவதற்காக, சேலத்தில் இருந்து ஈரோடு மாவட்டம் வழியாக கோவைக்கு தங்க நகைகள் கொண்டு செல்லப்படுகிறது' என்றனர். மேலும் அதற்கான ஆவணங்களை காண்பித்தனர். ஆனால் அதில் சில குறைபாடுகள் இருந்தது. முழு நகைகளுக்குமான ஆவணங்கள் இல்லை. இதனால் பறக்கும் படை அதிகாரிகள் அந்த வாகனத்துடன் நகைகளை பறிமுதல் செய்தனர். நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் உரிய ஆவணங்களின்றி மோகனூரைச் சேர்ந்த முட்டை வியாபாரி முருகேசன் என்பவர் கொண்டு வந்த ரூ.7 லட்சத்து 94 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டது.

38 3/4 Crore were seized by flying Squad at ~~Erod~~ Erode.

தினத்தந்தி

- 5 APR 2024

வயதானோர், பெண்கள் உட்கார பந்தல்:

# வாக்குச்சாவடிகளில் செய்ய வேண்டிய அடிப்படை வசதிகள்

## அரசுக்கு இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவு

சென்னை, ஏப்.5-

தமிழகத்தில் 19-ந் தேதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலின்போது அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று அரசுக்கு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அனைத்து அரசுச் செயலாளர்கள், மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

இந்திய தேர்தல் கமிஷனின் உத்தரவுப்படி, ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் உதவியாளர் மேஜை, குடிநீர், கழிவறை, சாய்தளம், மின்சார இணைப்பு வசதிகள், மாவட்ட தேர்தல் அதிகாரி கூறியுள்ள உள்கட்டமைப்பு வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் போன்றவை செய்து தரப்பட வேண்டும்.

15X15 அடி அளவில் துணிப்பந்தல் போடப்பட்டு, அதில் வாக்காளர்கள் காத்திருக்க இருக்கை வசதிகள் செய்து தரப்படவேண்டும். குறிப்பாக, குழந்தைகளை அழைத்து வரும் வாக்காளர்கள், பாலூட்டும் தாய்மார்கள், மூத்த குடிமக்கள், பெண்களுக்கு இந்த வசதி அவசியம் அளிக்கப்பட வேண்டும்.

கடந்த பொதுத்தேர்தலில் வாக்குச்சாவடி தயார் செய்யும் பணிக்காக ஒரு வாக்குச்சாவடிக்கு ரூ.1,300 வீதம் வழங்கப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்கள் அந்தப் பணிகளை மேற்கொண்டனர். மக்கள் அதிகமாக கூடும் இடம் என்பதால் சுகாதாரத்தை பேணுவதற்காக தகுந்த உத்தரவுகளை அலுவலர்களுக்கு வழங்க வேண்டும்.

வாக்குச்சாவடிகளுக்கு எண் அளித்தல், 200 மீட்டர் எல்லைக்கோடு வரைதல், வாக்குச்சாவடிக்குள் தடுப்புகளை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ECI instruct state govt for fulfill the basic needs at polling booth.

தினத்தந்தி

- 5 APR 2024

# அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. உறவினர் வீட்டில் வருமான வரித்துறை சோதனை

## ரூ.45 லட்சம் பறிமுதல்

திருப்பத்தூர், ஏப்.5-

திருப்பத்தூரில் அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.வின் உறவினர் வீட்டில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். அதில் ரூ.45 லட்சம் ரொக்கம் மற்றும் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

### முன்னாள் எம்.எல்.ஏ.வின் உறவினர்

திருப்பத்தூரைச் சேர்ந்தவர் நவீன்குமார் (வயது 40). இவர் திருப்பத்தூர் பஸ் நிலையம் அருகே போட்டோஸ்டூடியோ வைத்துள்ளார். மேலும் ரியல் எஸ்டேட், பைனான்ஸ் என பல்வேறு தொழில்கள் செய்து வருகிறார். நவீன்குமார் முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கே.ஜி.ரமேஷின் உறவினராவார். நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு பணம் வினியோகம் செய்வதற்காக நவீன்குமார் வீட்டில் பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக வருமான வரித்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

### ரூ.45 லட்சம் பறிமுதல்

அதன்பேரில் வருமான வரித்துறையினர் 10-க்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் இரவு நவீன்குமார் வீட்டிற்கு சென்று சோதனை நடத்தினர். சோதனையானது விடிய, விடிய நடைபெற்றது.

இந்த சோதனையில் சுமார் ரூ.45 லட்சம் ரொக்கம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. முன்னாள் எம்.எல்.ஏ.வின் உறவினர் வீட்டில் வருமான வரித்துறையினர் சோதனையில் ஈடுபட்டது திருப்பத்தூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

It Dept raid at ADMK former M.L.A's relative house.
& 45 lakhs unaccounted cash was seized.

தினத்தந்தி

5 APR 2024

சென்னையில் உள்ள 3 நாடாளுமன்ற தொகுதியிலும்

# தபால் ஓட்டு போடும் பணி திங்கட்கிழமை தொடக்கம்

## 85 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்கிறார்கள்

சென்னை, ஏப்.5-
சென்னையில் உள்ள 3 நாடாளுமன்ற தொகுதிகளிலும் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க தபால் ஓட்டு போடும் பணி திங்கட்கிழமை தொடங்குகிறது.

### தபால் வாக்கு

நாடாளுமன்ற தேர்தல் வருகிற 19-ந்தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு வீட்டில் இருந்து தபால் மூலம் வாக்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 நாடாளுமன்ற தொகுதிகளில் 11 ஆயிரத்து 369 மாற்றுத்திறனாளி வாக்காளர்களும், 63 ஆயிரத்து 751 பேர் 85 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்கள் என மொத்தம் 75 ஆயிரத்து 120 பேர் உள்ளனர்.

இவர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க ஏதுவாக கடந்த மாதம் 17-ந்தேதி முதல் 25-ந்தேதி வரையில் '12டி' படிவம் வழங்கும் பணி தொடங்கியது. வீடு வீடாக சென்று வாக்குசாவடி அலுவலர்கள் மூலம் படிவம் வழங்கப்பட்டு, பின்னர் நிரப்பிய படிவங்கள் பெறப்பட்டது. அதில் 85 வயதிற்கு மேற்பட்டோர் 4 ஆயிரத்து 589 பேர் இதுவரை தபால் மூலம் வாக்களிக்க விருப்பம் தெரிவித்து உள்ளனர். மாற்றுத்திறனாளிகள் 430 பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

### திங்கட்கிழமை

எனவே, சென்னையில் வரும் திங்கட்கிழமை முதல் தபால் வாக்குகளை வீடு தேடி சென்று வாங்கும் பணி தொடங்க உள்ளது. வாக்குச்சாவடிக்கு வர இயலாத வாக்காளர்களின் விவரங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு எந்த தேதியில் எந்த நேரத்தில் அவர்களின் வீடுகளுக்கு செல்ல வேண்டும் என்ற தகவலை வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாக்காளர்களுக்கு முன்கூட்டியே தகவல் அனுப்புவார்.

அதன் அடிப்படையில், திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று வாக்குசாவடி தலைமை அலுவலர் மூலம் வாக்காளர் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்ற விளக்கத்தினை அளித்து, அதன்பேரில் அவர்களிடம் ரகசிய வாக்குப் பதிவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோல, தபால் வாக்குப்பதிவு பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு கடந்த திங்கள்கிழமை முதல் பயிற்சி வகுப்புகள் நடந்து வருகிறது. இவர்களுக்கு தபால் வாக்கு பணியில் எவ்வாறு ஈடுபட வேண்டும் என்பது குறித்து விவரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### வீடியோ பதிவு

வீட்டிற்கு சென்று வாக்குபதிவு செய்யும் குழுவில் ஒரு வாக்குச்சாவடி தலைமை அலுவலர், ஒரு உதவி வாக்குச்சாவடி அலுவலர், ஒரு காவலர் மற்றும் ஒரு புகைப்படகலைஞர் ஆகிய 4 பேர் அடங்குவர். இவர்கள் வாக்களிப்பவரின் வீட்டிற்கு சென்று வாக்குச்சாவடி போன்ற அமைப்பினை ஏற்படுத்தி தபால் வாக்களிக்கும் நிகழ்வை வீடியோ பதிவாக எடுத்துக்கொள்வார்கள். இது சுமார் 20 நிமிடம் நடைபெறும். அவர்களின் வாக்கு தபால் வாக்குகளில் சேர்க்கப்பட்டு எண்ணப்படும்.

இதேபோல, தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் வாக்களிக்க ஏதுவாக படிவம் '12' மற்றும் '12 ஏ' ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. இதர மாவட்டங்களை சேர்ந்த தேர்தல் பணியாளர்களுக்கு தபால் வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்க வசதி மையம் ஏற்படுத்தப்பட உள்ளன. மேலும், இதர மாவட்டங்களை சேர்ந்த போலீசாருக்கும் தபால் வாக்கு செலுத்தும் வகையில் தனியாக தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் வசதி மையம் ஏற்படுத்தப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவத்தனர்.

Election officers started receiving postal vote from 85+ and PWDs.

தினத்தந்தி

- 5 APR 2024

# எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் கார்களில் சோதனை

## தேர்தல் பறக்கும் படையினர் நடவடிக்கை

ஊட்டி, ஏப்.5-

முன்னாள் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, நீலகிரி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து, பிரசாரம் செய்ய நேற்று கோவையில் இருந்து கார் மூலம் ஊட்டிக்கு சென்றார். அப்போது பாதுகாப்பு வாகனங்களும், கட்சியினரின் வாகனங்களும் வந்தன.

நீலகிரி எல்லையில் உள்ள பர்லியார் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகனங்களை நிறுத்த கூறினர். ஆனால் வாகனங்கள் நிற்காமல் சென்றது. உடனே அவர்கள் காட்டேரியில் உள்ள பறக்கும் படையினருக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் அங்கு அந்த வாகனங்களை மறித்து சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனையில் பணம், பொருள் எதுவும் சிக்கவில்லை.

ராமநாதபுரம் தொகுதியில் பா.ஜனதா கூட்டணி சார்பில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று, திருப்புல்லாணி பகுதியில் பிரசாரம் மேற்கொண்டார். அந்த பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தனர். அந்த வழியாக வந்த ஓ.பன்னீர்செல்வத்தின் காரை முழுமையாக சோதனையிட்டனர்.

தொண்டர்கள் போர்த்திய சால்வை மட்டும் காரில் இருந்தது. வேறு எந்த பொருட்களோ, பணமோ இல்லை. முழுமையான சோதனை முடிந்த பின்னர் ஓ.பன்னீர்செல்வம் அங்கிருந்து புறப்பட்டு தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார்.

Deep surveillance at Thiru Palaniswami & O.panneerselvam's car by flying Squad.

தினமலர்

- 5 APR 2024

# ஓட்டுக்கு பணம் வாங்கினால் நடவடிக்கை பாயும்: சாஹூ

சென்னை, ஏப். 5–

''ஓட்டுக்கு பணம் கொடுப்போர் மீதும், வாங்குவோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்படும்,'' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கொடுப்பதும் குற்றம்; அவற்றை வாங்குவதும் குற்றம். ஓட்டுக்கு பணம் கொடுப்போர் மீதும், வாங்குவோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வினியோகம், இரவு 10:00 மணிக்கு மேல் பிரசாரம் செய்தல் போன்றவை குறித்து, பொதுமக்கள், 'சி விஜில்' மொபைல் ஆப்ஸ் வழியாக புகார் அளிக்கலாம்.

தேர்தல் விதிமீறல்கள் குறித்து புகார் அளிக்க, பொதுமக்கள் முன் வர வேண்டும். இதுவரை பணம் கொடுத்ததாக புகார் வரவில்லை. ஒன்றிரண்டு புகார்கள் வந்தன; அவையும் பழைய வீடியோக்கள்.

தமிழகத்தில் பதற்றமான ஓட்டுச் சாவடிகளாக 8,050; கண்காணிக்க வேண்டிய ஓட்டுச்சாவடிகளாக 181 கண்டறியப் பட்டுள்ளன. இவற்றுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

வாக்காளர்களுக்கு, 'பூத் சிலிப்' வழங்கும் பணி துவக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம், 13.08 லட்சம் பேருக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது.

மற்றவர்களுக்கு வரும் 13ம் தேதிக்குள் வழங்கப்படும்.

இவ்வாறு சத்யபிரதா சாஹு கூறினார்.

## தமிழகம் மந்தம்

நாடு முழுதும் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்து பொதுமக்கள் புகார் அளிப்பதற்காக, 'சி விஜில்' மொபைல் ஆப், தேர்தல் கமிஷனால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் வழியே புகார் அளிப்பது, தமிழகத்தில் மந்தமாகவே உள்ளது.

நேற்று முன்தினம் வரை அதிகபட்சமாக கேரளாவில் 71,168 புகார்கள் வந்துள்ளன. இவற்றில், 70,929 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளன. இன்னும், 239 புகார்கள் நிலுவையில் உள்ளன.

அதற்கு அடுத்தபடியாக, உத்தரகண்ட் மாநிலத்தில் 14,684; கர்நாடகாவில் 13,959; ஆந்திராவில் 7,055 புகார் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. தமிழகத்தில் 2,168 புகார்கள் பெறப்பட்டதில், 2,139 மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இன்னும், 29 புகார்கள் நிலுவையில் உள்ளன.

தமிழகத்தை பொறுத்தவரை, கரூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 408 புகார்கள், அதற்கடுத்து சென்னையில் 239 புகார்கள் பெறப்பட்டு உள்ளன.

Strict action will be taken if voters get money for vote from political parties.

தினமலர்

- 5 APR 2024

# நகை கடைகளுக்கு கூரியரில் அனுப்பிய ரூ.1.92 கோடி தங்கம், வைரம் பறிமுதல்

திருவள்ளூர், ஏப். 5–

திருவள்ளூர் அருகே கூரியரில் அனுப்பி வைக்கப்பட்ட, 1.92 கோடி ரூபாய் மதிப்பிலான தங்க, வைர நகைகளை, பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் லோக்சபா தேர்தலை முன்னிட்டு, பணம், பரிசுப் பொருள் வினியோகத்தை தடுக்கும் வகையில், 90 பறக்கும் படைகள் மற்றும் 90 நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் மாவட்டம் முழுதும் வாகன சோதனை நடத்தி, உரிய ஆவணம் இன்றி கொண்டு செல்லப்படும் பணம், நகைகளை பறிமுதல் செய்து, அரசு கருவூலத்தில் ஒப்படைத்து வருகின்றன.


நேற்று முன்தினம், பிரவீன் தலைமையிலான தேர்தல் நிலை கண்காணிப்பு குழுவினர், சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலை பாண்டூர் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த 'பொலீரோ' வாகனத்தை நிறுத்தி சோதனையிட்டனர்.

சென்னையைச் சேர்ந்த பி.வி.சி.லாஜிஸ்டிக் நிறுவனத்தின் வாயிலாக, பிரபல நகை கடைகளுக்கு கூரியர் வாயிலாக, தங்கம், வெள்ளி மற்றும் வைர நகைகளை கொண்டு சென்றது தெரிந்தது.

கார் ஓட்டுனர் கார்த்திக் குமாரிடம் விசாரித்த போது, அனுமதி இல்லாமல் கொண்டு செல்வது தெரிந்தது.

இதையடுத்து பறக்கும் படையினர், காரில் இருந்த 2,775 கிராம் தங்கம், 14,021 கிராம் வெள்ளி மற்றும் 0.88 காரட் வைரம் ஆகியவற்றை பறிமுதல் செய்து, திருவள்ளூர் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தனலட்சுமியிடம் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட நகைகளின் மதிப்பு 1.92 கோடி ரூபாய்.



■ வாகன சோதனையில் பறிமுதல் செய்யப்பட்ட 1.92 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளி, வைர நகைகள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் வாயிலாக சார்நிலை கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டன. இடம்: திருவள்ளூர்.

Worth of Rs1.92 gold was seized.

தினமலர்
5 APR 2024

# தேர்தல் அன்று 3 வேளை ஹோட்டல் உணவு! வாக்காளர்களை கவர கட்சிகள் திட்டம்

தேர்தல் கமிஷன் கெடுபிடியால் பொருட்கள் வினியோகம் செய்வதில் கட்சிகளுக்கு சிக்கல் உள்ளது. அதனால், ஓட்டுப்பதிவு நாளில், ஹோட்டல் உணவு வழங்கி அவர்களை தம் பக்கம் இழுக்க தென்சென்னை தொகுதியில் கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்.

ஓட்டுப்பதிவு நாளில், பொது விடுமுறை என்பதால் வேலைக்கு செல்லும் பெரும்பாலானோர் அன்று வீடுகளில்தான் இருப்பர்.

அவர்களிடம், 'நீங்கள் பணம் வாங்க வேண்டாம்; எங்கள் கட்சிக்கு ஓட்டளியுங்கள். ஓட்டுப்பதிவு நாளில் சமைக்காமல் வீட்டில் ஓய்வு எடுங்கள். மூன்று வேளையும் 'ஆன்லைன்' வாயிலாக உணவு கொண்டு வந்து தருகிறோம்.

'ஹோட்டலுக்கு செல்வதாக இருந்தாலும், உங்களை அழைத்து செல்கிறோம். இதை லஞ்சமாக கருதாமல், எங்கள் வேட்பாளர் உங்கள் குடும்பத்தினருக்கு வைக்கும் விருந்தாக நினைத்து கொள்ளுங்கள்' என அன்பொழுக பேசுகின்றனர்.

அவர்கள் தெரிவிக்கும் பதிலை பொறுத்து, சைவமா, அசைவமா என குறிப்பெடுத்து கிளம்புகின்றனர்.

Political parties plan to cover the voters by giving foods for wholeday on polling day.

தினமலர்

5 APR 2024

# பதற்றமான ஓட்டுச்சாவடிகள் கலெக்டர் கணக்கெடுப்பு

புழல், ஏப். 5–

திருவள்ளூர் மாவட்ட எல்லையில் உள்ள அவற்றை, நேற்று காலை கலெக்டர் பிரபு சங்கர், கொளத்துார் காவல் மாவட்ட துணை கமிஷனர் பாண்டியராஜன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர். அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதி மற்றும் பாதுகாப்பு குறித்தும் கலெக்டர் விசாரித்தார்.

'மக்கள் அச்சமின்றி ஓட்டளிக்க, திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரிகள், போலீசாருடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்' என, கலெக்டர் பிரபு சங்கர் கூறினார்.

ஸ்ரீபெரும்புதுார் லோக்சபா தொகுதிக்கு உட்பட்ட அம்பத்துார் சட்டசபை தொகுதியில், 350 ஓட்டுச்சாவடிகள் உள்ளன.

அவற்றில், அம்பத்துார் டீச்சர்ஸ் காலனி, பட்டரவாக்கம், மாதனாங்குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள எட்டு ஓட்டுச்சாவடிகள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ளன.

அவற்றை, அம்பத்துார் மண்டல அலுவலரும், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியுமான கருணாகரன், போலீஸ் கண்காணிப்பு குழுவினர், அம்பத்துார் தாசில்தார் மற்றும் மண்டல அதிகாரிகள் நேற்று காலை ஆய்வு செய்தனர்.

Deep Surveillance by district Collector on Vulnerable polling booth.

தினமலர்

5 APR 2024

# ஓடாக தேயும் அரசு வாகனங்கள்

தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக மக்கள் பிரதிநிதிகளாக உள்ள அமைச்சர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளின் அரசு வாகனங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

ஆனால் திருப்பூர் மாவட்டத்தில் விதிமுறைகளை மீறி, அரசு வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில், 13 ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்களுக்கு சமீபத்தில் 'ஏசி' வசதி கொண்ட 'ஸ்கார்பியோ' கார்கள் வழங்கப்பட்டன. இவை அனைத்தும் தற்போது தேர்தல் பணிக்கும் அதிகாரிகளின் தனி வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வாகனங்களின் டிரைவர்களுக்கு சம்பளத்துடன் ஓய்வு தரப்பட்டுள்ளது.

வருவாய் துறையின் டிரைவர்கள், டிரைவிங் லைசென்ஸ் வைத்துள்ள கடைநிலை ஊழியர்களால், இவ்வாகனங்கள் இயக்கப்படுகின்றன. இவற்றில் ஜி.பி.எஸ்., கருவி பொருத்தப்படவில்லை. 'லாக்புக்' நடைமுறையும் பின்பற்றப்படுவதில்லை.

தற்போது, திருப்பூர் லோக்சபா தொகுதிக்கான தேர்தல் பார்வையாளராக, ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ்., அதிகாரி ஹிமான்சு குப்தா நியமிக்கப்பட்டுள்ளார். மூன்று நாட்களுக்கு முன்பு, தேர்தல் பார்வையாளரின் குடும்பத்தினர், விமானம் மூலம் கோவை வந்தனர். அவர்கள், கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள மாவட்ட விருந்தினர் மாளிகையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை, தேர்தல் பார்வையாளர் ஹிமான்சு குப்தா, தன் குடும்பத்தினருடன், தேர்தல் பணிக்காக வழங்கப்பட்டுள்ள சைரன் பொருத்திய, 'இனோவா' காரில் சுற்றுலா புறப்பட்டு சென்றார். மற்றொரு அரசு வாகனத்தில், உதவியாளர், போலீசாரும் சென்றனர்.



■ தேர்தல் பார்வையாளர் ஹிமான்சு குப்தா, குடும்பத்தினருடன் இன்ப சுற்றுலா சென்ற அரசு வாகனம்.

தேர்தல் பார்வையாளர் மற்றும் குடும்பத்தினர், பழனி மற்றும் கொடைக்கானலுக்கு சுற்றுலா சென்றதாக கூறப்படுகிறது. விரைவில் ஊட்டிக்கு சுற்றுலா செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து விளக்கம் கேட்பதற்காக தேர்தல் பார்வையாளர், ஹிமான்சு குப்தாவின் மொபைல் எண்ணுக்கு தொடர்பு கொண்டபோது, அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

விதிமீறல்களை கண்டறிந்து தடுத்து, அமைதியான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக நியமிக்கப்பட்ட தேர்தல் பார்வையாளர், விதிகளை மீறி அரசு வாகனத்தில் குடும்பத்துடன் சுற்றுலா சென்றதற்காக செலவினங்களும் ஒட்டுமொத்த தேர்தல் செலவில்தான் சேர்க்கப்படுமா என, வாக்காளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

Election observer himanshu gupta using govt car for his own family use.

தினமலர்
5 APR 2024

# விழிப்புணர்வு பாடல் பாடிய அதிகாரி

அனைவரும் ஓட்டளிக்க வலியுறுத்தி, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு, சொந்தக்குரலில் பாடிய பாடல் வீடியோ நேற்று வெளியிடப்பட்டது.

'சிறகை விரித்து பறக்கும் பறவை இனம் போலே, 18 வயது தொட்டால் துள்ளிக் குதிக்கும் மனமே... ஓ உன் உரிமை காட்டிடும் வயது இது கேளாய்... உன் கடமை செய்திடும் நேரம் இது பாராய்... முதல் மை வைத்து நீ நாட்டுக்காக ஓட்டளி... இந்தியன் என்று உணர்த்தும் நாள் எது, உன் ஓட்டை பதிவிடும் தேர்தல் நாள் அது... உன் ஓட்டுப் பதிவில்... பணமேதும் வாங்காமல் மனசாட்சி சொல்படி, வாய்மையாய், நேர்மையாய், தூய்மையாய் உன் ஓட்டை செலுத்து நீ... எடுத்துக்காட்டாய் மாறிடு... 100 சதவீதம் ஓட்டளிப்போம்...' என்ற தேர்தல் விழிப்புணர்வு பாடலை பாடியுள்ளார்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சத்யபிரதா சாஹு, தமிழில் அழகாக பாடியிருப்பது, அனைவருடைய பாராட்டையும் பெற்றுள்ளது.

CEO, TN Sang a Awareness song for upcoming elections 2024

தினமலர்
5 APR 2024

# வேட்பாளர் கணக்கு ரூ.2 லட்சம் அதிகாரிகள் கணக்கு ரூ.22 லட்சம்

காஞ்சிபுரம், ஏப். 5–

காஞ்சிபுரம் தனித் தொகுதியில் தி.மு.க., சார்பில் செல்வம், அ.தி.மு.க., சார்பில் பெரும்பாக்கம் ராஜசேகர், பா.ம.க., சார்பில் ஜோதி உட்பட 11 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பிரசார நேரத்தில் கொடி வாங்குவது, வாகன வாடகை, ஸ்பீக்கர் வாடகை, மேடை அமைப்பது, கட்சி அலுவலகம் திறப்பது உள்ளிட்ட பல்வேறு செலவுகளை, தேர்தல் கமிஷனுக்கு, வேட்பாளர்கள் சார்பில் கணக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

இதை மூன்று தவணைகளாக செய்யலாம். முதல் தவணையாக ஏப்., 2ம் தேதிக்குள் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, காஞ்சிபுரம் வேட்பாளர்கள் தங்களது முதல் தவணை செலவு கணக்குகளை தாக்கல் செய்துள்ளனர்.

தி.மு.க., வேட்பாளர் செல்வம் சார்பில், கடந்த மாதம் 26ம் தேதி முதல் 30ம் தேதி வரை செலவான விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதில், 1.99 லட்சம் ரூபாய், பிரசாரத்திற்கு பல வகையில் செலவானதாக கணக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால், வேட்பாளரின் பிரசார நிகழ்ச்சிகளை பின்தொடர்ந்து வீடியோ பதிவு செய்யும் தேர்தல் அதிகாரிகள், அப்போது நடந்த செலவுகளை கணக்கிட்டு, 22.75 லட்சம் ரூபாய் செலவானதாக கணக்கு எழுதியுள்ளனர்.

இரண்டுக்கும் 20.7 லட்சம் ரூபாய் வித்தியாசம் வருவதால், தி.மு.க., நிர்வாகிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதற்கான ஒப்புதலையும், தேர்தல் செலவின பார்வையாளர் மதுக்கர் ஆவேஸ் வழங்கியுள்ளார்.

அதேபோல, அ.தி.மு.க., வேட்பாளர் ராஜசேகர் தரப்பில், 11.11 லட்சம் ரூபாய் பிரசாரத்திற்கு செலவானதாக கணக்கு காண்பித்துள்ளனர். தேர்தல் அதிகாரிகள் தரப்பில் 17.83 லட்சம் ரூபாய் செலவானதாக கணக்கிட்டுள்ளனர். இரண்டுக்கும் இடையே, 6.7 லட்சம் ரூபாய் வித்தியாசம் உள்ளது.

பா.ம.க., வேட்பாளர் ஜோதி தரப்பில் 7.44 லட்சமும், தேர்தல் அதிகாரிகள் தரப்பில் 9 லட்சம் ரூபாய் செலவானதாகக் கணக்கிடப்பட்டுள்து.

தவிர, ஆறு சுயேச்சை வேட்பாளர்கள் தேர்தல் செலவினம் ஏதும் இல்லை என, கணக்கு தாக்கல் செய்துள்ளனர்.

News regarding candidates are filing low Expenditure for Campaign but Election officers are calculate the original Expenditure.

தினமலர்

- 5 APR 2024

# முதியோர், மாற்றுத்திறனாளி தபால் ஓட்டளிப்பது துவக்கம்

**சென்னை, ஏப். 5–**

தமிழகத்தில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள், லோக்சபா தேர்தலில் தபால் ஓட்டளிக்கும் பணி நேற்று துவங்கியது.

தமிழகத்தில், 39 லோக்சபா தொகுதிகளுக்கு, வரும் 19ம் தேதி ஓட்டுப்பதிவு நடைபெற உள்ளது. மாநிலம் முழுதும் உள்ள வாக்காளர்களில், 6.08 லட்சம் பேர், 85 வயதுக்கு மேற்பட்டவர்கள். அவர்கள் விரும்பினால் வீட்டிலிருந்தே ஓட்டளிக்கலாம் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது.

அதன்படி, தபால் ஓட்டளிக்க விரும்பிய, 4.30 லட்சம் பேருக்கு, 12டி விண்ணப்பம் வழங்கப்பட்டது. அதை, 77,445 பேர் பூர்த்தி செய்து வழங்கினர். மற்றவர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தரவில்லை.

**விண்ணப்பம்**

அதேபோல மாற்றுத்திறனாளிகள் 4.62 லட்சம் பேரில், தபால் ஓட்டளிக்க விருப்பம் தெரிவித்த, 3.65 லட்சம் பேருக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

அவர்களில், 50,676 பேர் மட்டுமே தபால் ஓட்டளிக்க விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வழங்கினர்.

இதையடுத்து, 77,445 முதியோர்; 50,676 மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு, அவர்களின் வீட்டுக்கே சென்று, தபால் ஓட்டு வழங்கி, அதில் அவர்கள் ஓட்டை பதிவு செய்து, ஓட்டுப் பெட்டியில் பெறும் பணி நேற்று துவங்கியது.

ஈரோடு, கோவை, திருச்சி மாவட்டங்களில், இப்பணி நேற்று துவங்கியது.

மற்ற மாவட்டங்களில் இன்று துவக்கப்பட உள்ளது. ஓட்டுச்சாவடி அலுவலர், போலீசார், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு, தபால் ஓட்டளிக்க விண்ணப்பம் அளித்தவர்களின் வீடுகளுக்கு சென்று தபால் ஓட்டை பெறுவர்.

வீட்டிற்கு செல்லும் போது, அவர்கள் இல்லாவிட்டால், இரண்டாவது முறை செல்வர். அப்போதும் இல்லையென்றால், அதன்பின் அலுவலர்கள் செல்ல மாட்டார்கள். அவர்கள் ஓட்டுச்சாவடிக்கும் சென்று ஓட்டளிக்க முடியாது.

அதேநேரம் விண்ணப்பம் பெற்று, அதை பூர்த்தி செய்து வழங்காதவர்கள், ஓட்டுச் சாவடிக்கு சென்று ஓட்டளிக்கலாம். தபால் ஓட்டு பெறும் பணி, வரும் 18ம் தேதி வரை நடக்கும். இத்தகவலை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹு தெரிவித்தார்.

**சென்னையில்...**

சென்னை மாவட்டத்தில், 10,370 மாற்றுத்திறனாளிகள், 85 வயதுக்கு மேற்பட்ட 63,751 முதியோர் உள்ளனர்.

முன்கள பணியாளர்கள், 563 பேர் என, மொத்தம் 74,684 வாக்காளர்கள் தபால் ஓட்டு அளிக்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு வீடு வீடாக சென்று ஓட்டுப்பதிவு பணி நடக்க உள்ளது.

மற்ற மாவட்டங்களில் தபால் ஓட்டு பணி துவங்கியுள்ள நிலையில், சென்னை மாவட்டத்தில் ஓரிரு நாளில் துவங்கும் என, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

News regarding Election officers Starting to receive postal vote from 85+ & PwDs.

தினமலர்

5 APR 2024

# எழுத்துப்பிழை போன்ற காரணங்களால் ஓட்டளிக்கும் உரிமை மறுக்கப்பட கூடாது

**வாக்காளர் அடையாள அட்டையில் புகைப்படம் மாறி இருந்தாலோ, வாக்காளர் அடையாள அட்டை இல்லாமல் இருந்தாலோ, வேறு முறையான ஆவணங்களை காட்டினால் ஓட்டளிக்க அனுமதிக்க வேண்டும்**

**புதுடில்லி, ஏப். 5–**

எழுத்துப்பிழை உள்ளிட்ட சிறிய தவறுகளால், உண்மையான வாக்காளர்கள் ஓட்டளிக்கும் உரிமையை தவறவிடாமல் இருப்பதை உறுதி செய்ய, மாநில தேர்தல் அதிகாரிகளுக்கான வழிகாட்டுதல்களை தலைமை தேர்தல் கமிஷன் வழங்கி உள்ளது.

வரும் 19ம் தேதி துவங்கி, ஜூன் 1 வரை, ஏழு கட்டங்களாக லோக்சபா தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு நடக்கிறது. முடிவுகள் ஜூன் 4ல் வெளியாகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை தலைமை தேர்தல் கமிஷன் முழுவீச்சில் செய்து வருகிறது. வாக்காளர் அடையாள அட்டையில் எழுத்துப்பிழை, புகைப்படம் அல்லது முகவரி மாற்றம் உள்ளிட்ட சிறிய பிழைகளால் வாக்காளர்கள் ஓட்டளிக்க முடியாத நிலை ஏற்படுகின்றன.

இவற்றை தவிர்த்து, உண்மையான வாக்காளர்கள் ஓட்டுரிமையை இழக்காமல் இருக்க, தலைமை தேர்தல் கமிஷன் வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளன.

அதன் விபரம்:

பெயர் மற்றும் முகவரியில் எழுத்துப் பிழை போன்ற சிறிய காரணங்களுக்காக வாக்காளரை ஓட்டளிக்கவிடாமல் திருப்பி அனுப்பக் கூடாது.

வாக்காளர் அடையாள அட்டையில் புகைப்படம் மாறி இருந்தாலோ, வாக்காளர் அடையாள அட்டை இல்லாமல் இருந்தாலோ, வேறு முறையான ஆவணங்களை காட்டினால் ஓட்டளிக்க அனுமதிக்க வேண்டும்.

ஆதார், புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது தபால் துறை பாஸ்புக், தொழிலாளர் அமைச்சகம் வழங்கிய சுகாதார காப்பீடு அட்டை, ஓட்டுனர் உரிமம், வருமான வரிக்கணக்கு அட்டை உள்ளிட்ட அட்டைகளில் ஒன்றை காண்பித்து ஓட்டளிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

News regarding How we can vote by using other govt authorised id's.

தினமலர்
- 5 APR 2024

# பிரதமர் நிகழ்ச்சியில் பள்ளி குழந்தைகள் பெற்றோர் புகார் அளித்தனரா: ஐகோர்ட் கேள்வி

சென்னை, ஏப். 5–

கோவைக்கு, கடந்த 18ல் பிரதமர் மோடி வந்தார். அப்போது, 'ரோடு ஷோ' நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், கோவையில் உள்ள அரசு உதவி பெறும் சாய்பாபா வித்யாலயம் நடுநிலைப் பள்ளி மாணவர்களை, பள்ளிச் சீருடையில் அழைத்து சென்றதாக, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு சார்பில், போலீசில் புகார் அளிக்கப்பட்டது.

தனியார் பள்ளி நிர்வாகத்துக்கு எதிராக, சிறார் நீதி குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி, சாய் பாபா வித்யாலயம் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை புகழ்வடிவு, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு, நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, 'பிரதமர் நிகழ்ச்சி காரணமாக, மாணவர்களை வீட்டுக்கு அழைத்து செல்லும்படி, பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

'பெற்றோர் அழைத்து செல்லாத குழந்தைகள் மட்டுமே பேரணிக்கு சென்றனர். அதற்கு எப்படி பொறுப்பேற்க முடியும்' என, மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

போலீஸ் தரப்பில் ஆஜரான அரசு வழக்கறிஞர் முகிலன், ''மாவட்ட குழந்தைகள் நல அதிகாரி. விசாரணைக்கு பின் புகார் அளிக்கப்பட்டது. பிரதமர் நிகழ்ச்சியில், பள்ளி குழந்தைகளுடன் தலைமை ஆசிரியை உள்பட மூன்று ஆசிரியர்கள் பங்கேற்றுள்ளனர்.



''அரசியல் நிகழ்ச்சியில் பள்ளி குழந்தைகள் பங்கேற்றது தவறு. கூட்ட நெரிசலில், நீண்ட நேரம் குழந்தைகளை நிற்க வைத்து, அவர்களுக்கு உடல், மன ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர்,'' என்றார்.

இரு தரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி, 'பள்ளி குழந்தைகளை, பிரதமர் நிகழ்ச்சிக்கு அழைத்து சென்றது தொடர்பாக, பெற்றோர் எதுவும் புகார் அளித்து உள்ளனரா; நிகழ்ச்சியில் இருந்த போது பள்ளி ஆசிரியர்கள் யாரும் உடன் இருந்தனரா; சிறார் நீதி சட்டம் எப்படி பொருந்தும் என்பன குறித்து, போலீசார் விளக்கம் அளிக்க வேண்டும்' என உத்தரவிட்டு, 8ம் தேதிக்கு விசாரணையை தள்ளிவைத்தார்.

அப்போது, பள்ளி நிர்வாகம் மீது கடும் நடவடிக்கை எடுக்க விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீட்டிக்க வேண்டும் என, மனுதாரர் தரப்பில் கோரப்பட்டது.

இதை ஏற்ற நீதிபதி, மறு உத்தரவு வரும் வரை, பள்ளி நிர்வாகம் மீது கடும் நடவடிக்கைகளை எடுக்கவும் தடை விதித்தார்.

Madras Highcourt instructs the state govt to clarify if any law ~~bans~~ laws bans minors from political campaigns.

தினகரன்

5 APR 2024

# ₹1.5 கோடி தங்க நகைகள் பறிமுதல்

சென்னை, ஏப். 5: ஸ்ரீபெரும்புதூர், பட்டறைபெரும்புதூர் சுங்கச்சாவடி அருகே தேர்தல் நிலை கண்காணிப்பு குழு சார்பில் பிரவீன் தலைமையிலான குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஆந்திர மாநிலம் திருப்பதியில் இருந்து வந்த வேனை மடக்கி சோதனையிட்டனர். சென்னையில் உள்ள தனியார் நகைக்கடையில் இருந்து திருப்பதியில் உள்ள கடைக்கு நகைகளை கொடுத்துவிட்டு மீதமுள்ள நகைகளை எடுத்து வந்ததும் தெரிய வந்தது. ₹1.25 கோடி மதிப்புள்ள 2.15 கிலோ தங்கம் இருப்பது தெரியவந்தது. உரிய ஆவணங்கள் இல்லாததால் அவை பறிமுதல் செய்யப்பட்டது.

இதுபோல, தண்டையார்பேட்டையில் நேற்று தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பைக்கில் வந்த மணலி தனியார் நிதி நிறுவன ஊழியர் ராஜாசிங்கிடம், ₹5 லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் பறிமுதல் செய்தனர்.

1.5 crore were seized by flying squad.

தினகரன்

5 APR 2024

# ஈரோடு எம்பி தொகுதி காலி

**மக்களவை செயலகம் அறிவிப்பு**

சென்னை, ஏப்.5: ஈரோடு நாடாளுமன்ற தொகுதி காலியாக உள்ளது என மக்களவை செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மக்களவை செயலகம் வெளியிட்டுள்ள அரசிதழில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தின் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.கணேசமூர்த்தி கடந்த மாதம் 28ம் தேதி கோயம்புத்தூரில் காலமானார்.

இதனையடுத்து அன்றைய தேதியிலிருந்து அவரது மக்களவை இடம் காலியாகிவிட்டது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

lok sabha secretariat announce that vacant at Erode constituency due to M.P Thiru L. Ganesamoorthy dies

தினகரன்

5 APR 2024

காக்கி சீருடை அணிந்து வாகன சோதனை

# பறக்கும் படை போல் நடித்து வாலிபரிடம் ₹40,000 அபேஸ்

## சிசிடிவி பதிவுகளை வைத்து விசாரணை

பெரம்பூர், ஏப்.5: மாதவரம் ஜிஎன்டி சாலை தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் ரவிச்சந்தர் ஜா (34). இவர் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர். கடந்த 29ம் தேதி இரவு தனது பைக்கில் வியாசர்பாடி மூர்த்திங்கர் தெரு, பொன்னப்பன் தெரு வழியாக வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது காக்கி சீருடையில் இருந்த 2 ஆண்கள் மற்றும் ஒரு பெண், இவரை வழிமடக்கி, தங்களை தேர்தல் பறக்கும் படை எனக் கூறி, விசாரணை செய்துள்ளனர். அப்போது இவரிடம் இருந்த ₹40 ஆயிரத்தை பறிமுதல் செய்து, உரிய ஆவணத்தை காண்பித்து விட்டு பணத்தை வாங்கிச் செல்லுமாறு கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

இதுதொடர்பாக, அவர் வியாசர்பாடி காவல் நிலையத்தில் விசாரித்தபோது, போலீசார் யாரும் வாகன சோதனை நடத்தி, பணத்தை பறிமுதல் செய்யவில்லை, என தெரிவித்துள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த ரவிச்சந்தர் ஜா, இதுதொடர்பாக, புகார் மனு அளித்துள்ளார். தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பணத்தை பிடித்திருந்தால் கருவூலத்தில் ஒப்படைத்து இருப்பார்கள்.


இருப்பினும் ₹40 ஆயிரம் ரூபாய் என்பதால் அவர்கள் பணத்தை பறிமுதல் செய்ய வாய்ப்பில்லை. எனவே புகாரின் உண்மைத்தன்மை குறித்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

40,000 were seized by fake flying squad team. & Police started investigation by CCTV

தினகரன்

5 APR 2024

# பணம் பட்டுவாடா வீடியோ வைரல் வழக்குப்பதிந்து விசாரணை



பிரசாரத்தில் கூட்டத்தை காட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆட்கள் அழைத்து வரப்பட்டனர். இதற்காக அந்தந்த பகுதியில் உள்ள நிர்வாகிகள் வாகன வாடகை, சாப்பாடு செலவு மற்றும் ஒரு நபருக்கு ₹300 என நிர்ணயம் செய்து வழங்கி உள்ளதாக தெரிகிறது. ஊட்டி ஒன்றிய செயலாளர் பெள்ளி என்பவர், தான் அழைத்து வந்த தொண்டர்களுக்கு கூட்டம் முடிந்த பின் ஏடிசி., பகுதியில் உள்ள டேக்சி ஸ்டாண்டில் வைத்து பணம் பட்டுவாடா செய்து கொண்டு இருந்தார். அப்போது தொண்டர்கள் சிலர் பணம் போதவில்லை எனக் கூறி அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதுதொடர்பான வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. இதையடுத்து தேர்தல் அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Case were filed for money distribution.

தினகரன்

5 APR 2024



▸ தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தபால் வாக்குப்பதிவு நேற்று தொடங்கியது. திருச்சி சிந்தாமணி பகுதியில் வீட்டுக்கு சென்ற தேர்தல் அலுவலர்களிடம் முதியவர் தபால் ஓட்டு செலுத்தினார்.

### நாடாளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 14 நாட்களே உள்ளன

# தமிழகத்தில் தபால் ஓட்டுப்பதிவு தொடக்கம்

சென்னை, ஏப். 5: தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 14 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கான தபால் வாக்குப்பதிவு நேற்று தொடங்கியது.

நாடாளுமன்ற தேர்தல் வருகிற 19ம் தேதி தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை 7 கட்டங்களாக நடத்தப்படுகிறது. முதல்கட்டமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளுக்கும் வருகிற 19ம் தேதி (வெள்ளி) நடக்கிறது. அதோடு அருணாச்சல பிரதேசம் 2 தொகுதி, அசாம் 5, பீகார் 4, சட்டீஸ்கர் 1, மத்தியபிரதேசம் 6, மகாராஷ்டிரா 5, மணிப்பூர் 2, மேகாலயா 2, மிசோராம் 1, நாகாலாந்து 1, ராஜஸ்தான் 12, சிக்கிம் 1, திரிபுரா 1, உத்தரபிரதேசம் 8, உத்தராகாண்ட் 5, மேற்குவங்கம் 3, அந்தமான் 1, ஜம்மு காஷ்மீர் 1, லட்சத்தீவு 1 என மொத்தம் 102 தொகுதிகளுக்கும் தேர்தல் நடக்கிறது.

முதல்கட்ட தேர்தல் பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்தில் வாக்குப்பதிவுக்கு இன்னும் 14 நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள், வேட்பாளர்கள், நட்சத்திர பேச்சாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலையில் தமிழகத்தில் 85 வயதை

11ம் பக்கம் பார்க்க

**சென்னையில் யார் யார்? -** சென்னையில் 63,754 பேர் 85 வயதுக்கு மேல் உள்ளவர்கள், 10,335 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். 85 வயதுக்கு மேற்பட்டோர் 25,954 பேர் 12டி விண்ணப்பம் வாங்கியுள்ளனர். இதில் 4,117 முதியவர்கள், 374 மாற்றுத்திறனாளிகள் மட்டுமே விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வழங்கியுள்ளனர்.

**முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் வாக்குப்பதிவு செய்தனர்**

News regarding postal vote.

தினகரன்
5 APR 2024

# தமிழகத்தில் தபால் ஓட்டுப்பதிவு தொடக்கம்... முதல் பக்க தொடர்ச்சி

தாண்டியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தபால் வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணி முதல் தொடங்கியது. தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6,08,952 பேர் உள்ளனர். இவர்களில் 4,30,734 பேர் தபால் வாக்களிக்க 12டி விண்ணப்பம் பெற்றுள்ளனர். இதில் 77,445 பேர் மட்டுமே தபால் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுத்துள்ளனர். அதேபோன்று தமிழகத்தில் 4,61,909 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இதில் 3,65,875 பேர் தபால் வாக்களிக்க விண்ணப்பம் பெற்றுள்ளனர். 50,676 பேர் மட்டுமே விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வழங்கியுள்ளனர்..

அதன்படி, தமிழகத்தில் முதியோர்கள் மற்றும் ஊனமுற்றோர்கள் தபால் வாக்கு அளிக்கும் பணி நேற்று தொடங்கியது. ஈரோடு தொகுதியில் மட்டும் 3,054 பேர் விண்ணப்பம் செய்த நிலையில் 3,001 பேர் தகுதி செய்யப்பட்டிருந்தனர். இதில் 85 வயதிற்கு மேற்பட்ட 2,201 பேர், 800 மாற்றுத்திறனாளிகளிடம் வீடுகளுக்கே சென்று தபால் வாக்குகள் பெறும் பணி தொடங்கியது. தொடர்ந்து 4 நாட்கள் நடக்கிறது. அதே நேரத்தில் சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் தபால் ஓட்டு போடும் பணி திங்கட்கிழமை (8ம் தேதி) தொடங்குகிறது. இந்த பணிகள் வருகிற 18ம் தேதியுடன் முடியும்.



ஈரோடு கருங்கல்பாளையம் கலைஞர் நகரில் தபால் வாக்கு செலுத்தும் மாற்றுத்திறனாளி பெண்.

வீடுகளுக்கே சென்று வாக்குகள் பெற ஏதுவாக அனைத்து மாவட்டத்திலும் நடமாடும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் ஒரு வாக்குச்சாவடி தலைமை அலுவலர், ஒரு உதவி வாக்குச்சாவடி அலுவலர், ஒரு நுண்பார்வையாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு புகைப்பட கலைஞர் ஆகியோர் இருப்பர். தபால் வாக்கு அளிக்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பம் பெற்று, அதை பூர்த்தி செய்து வழங்காதவர்கள் வருகிற 19ம் தேதி வாக்குச்சாவடி மையங்களுக்கே சென்று வாக்களிக்கலாம்.

## காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்தில் தபால் வாக்கு அளிக்க தகுதியானவர்கள் விவரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12,034 பேர் 85 வயதுக்கு மேல் உள்ளவர்கள், 8,248 பேர் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். இவர்களில் 85 வயதுக்கு மேற்பட்டோர் 8,261 பேர், மாற்றுத்திறனாளிகள் 6,890 பேர் 12டி விண்ணப்பம் வாங்கி, பூர்த்தி செய்து கொடுத்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 25,203 பேர் 85 வயதுக்கு மேல் உள்ளவர்கள், 13,367 பேர் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். இவர்களில் 85 வயதுக்கு மேற்பட்டோர் 17,648 பேர், மாற்றுத்திறனாளிகள் 11,959 பேர் 12டி விண்ணப்பம் வாங்கியுள்ளனர். இதில் 1,896 முதியவர்கள், 1,035 மாற்றுத்திறனாளிகள் மட்டுமே விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வழங்கியுள்ளனர்.

திருவள்ளூர் ம்ாவட்டத்தில் 24,040 பேர் 85 வயதுக்கு மேல் உள்ளவர்கள், 29,472 பேர் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். இவர்களில் 85 வயதுக்கு மேற்பட்டோர் 22,300 பேர், மாற்றுத்திறனாளிகள் 17,821 பேர் 12டி விண்ணப்பம் வாங்கியுள்ளனர். இதில் 1,534 முதியவர்கள், 1,008 மாற்றுத்திறனாளிகள் மட்டுமே விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வழங்கியுள்ளனர்.

News regarding postal vote.

தினகரன்

5 APR 2024

# தமிழகத்தில் 8050 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை

சென்னை, ஏப்.5: தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு சென்னையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் மொத்தம் 68,321 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட உள்ளது. இதில் 8,050 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை. 181 வாக்குச்சாவடிகள் மிகவும் பதற்றமானவை என்று கண்டறியப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

News regarding 8050 vulnerable polling booths.

தினகரன்

5 APR 2024

## தேர்தல் நன்னடத்தை விதிகள் அமல்

# பறக்கும் படையினரால் ₹168 கோடி பறிமுதல்

சென்னை, ஏப்.5: நாடாளுமன்ற தேர்தலையொட்டி தமிழகம் முழுவதும் கண்காணிப்பு பணியில் 700க்கும் மேற்பட்ட பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. ஆவணமின்றி ரூ.50 ஆயிரத்துக்கும் மேல் எடுத்துச் சென்றால் பணத்தை பறிமுதல் செய்யும் நடவடிக்கையில் பறக்கும் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் பறக்கும் படையினர் காவலர்களுடன் இணைந்து தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி ரூ.74 கோடி ரொக்க பணமும், மதுபான வகைகள் ரூ.3.9 கோடி, போதைப் பொருள் வகைகள் ரூ.78 லட்சம், தங்கம், வெள்ளி பொருட்கள் ரூ.74 கோடி மற்றும் பரிசு பொருட்கள் ரூ.15 கோடி என கடந்த 16ம் தேதி முதல் நேற்று வரை ரூ.168 கோடி வரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

168 Crore were seized by flying Squad

தினகரன்

5 APR 2024

### தமிழகத்தில் 1,694 புகார்கள் பதிவு

# விதிகளை மீறும் நபர்களுக்கு 5 ஆண்டுகள் வரை தண்டனை

சென்னை, ஏப்.5: தமிழகத்தில் தேர்தல் விதிமீறல் தொடர்பாக 1,694 புகார்கள் பதிவாகியுள்ளது. மேலும் தேர்தல் விதிமீறும் நபர்கள் மீது ஐபிசி சட்டத்தின் கீழ் 5 ஆண்டுகள் வரை தண்டனை வழங்கப்படும் என தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு முதன் முதலில் 1951ம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாக மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போதெல்லாம், தேர்தல் நடத்தை விதிகள் என்று தனியாக எதுவுமில்லை. கேரளத்தில் 1960ல் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றபோது சில விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டன. அதுதான் முதன்முதலில் அமல்படுத்தப்பட்ட தேர்தல் நடத்தை விதிமுறைகள். அதன் பிறகு ஆளும் கட்சியினர் தங்கள் பதவியைத் தவறாகப் பயன்படுத்திவிட கூடாது என்பதற்காக 1979ல் முதன் முதலில் தேர்தல் நடத்தை விதிகளை அதிகாரப்பூர்வமாக தேர்தல் ஆணையம் நடைமுறைப்படுத்தியது. தேர்தல் நடத்தை விதிகள் எந்த ஒரு சட்டத்தின் கீழும் அமலாகவில்லை. எனினும் இதன் சில விதிகள் இபிகோ சட்டத்தின் கீழ் அமலாகின்றன.

இந்நிலையில் நாட்டின் குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் மிக முக்கியமான பணியை தன்னாட்சி அதிகாரம் பெற்ற தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு தேர்தலை நடத்தும்போது, அதில் எந்த இடத்திலும் முறைகேடு நடைபெறக் கூடாது என்பதற்காக, பல்வேறு விதிமுறைகளை தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது. அதன்படி தேர்தல் விதிகளை மீறும் எந்த ஒரு நபரும் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படுவார்.

மேலும் தேர்தல் விதிமீறல் குறித்த புகார்களைத் தெரிவிக்க சி-விஜில் (cVIGIL) என்ற செயலியையும் இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த செயலியில் தேர்தல் நடத்தை விதிகளை மீறுவதை புகைப்படம் அல்லது வீடியோ பதிவு செய்து அனுப்பலாம். அதில் அனுப்பக்கூடிய புகார்கள், தகவல்கள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி அல்லது உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு அனுப்பப்படும். அவர் அதன் உண்மைத் தன்மை குறித்து ஆராய்ச்சி செய்வார்.

அந்த வகையில் நேற்று காலை நிலவரப்படி தேர்தல் விதிமீறல் தொடர்பாக சி-விஜில் செயலி மூலம் தமிழகத்தில் 1,694 புகார்கள் பதிவாகியுள்ளன. அதிகப்படியாக கரூர் மாவட்டத்தில் இருந்து பெறப்பட்ட 372 புகார்கள் உண்மைத் தன்மையுடையவை என கண்டறியப்பட்டுள்ளது. அடுத்தப்படியாக சென்னை மாவட்டத்தில் 3 மக்களவைத் தொகுதிகள் இருக்கும் நிலையில் 209 புகார்கள் உண்மைத் தன்மையுடையவை என கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல சில மாவட்டங்களிலிருந்து ஆதாரங்களுடன் புகார்கள் எதும் வரவில்லை என தமிழக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**தேர்தல் ஆணையம் எச்சரிக்கை**

## தேர்தல் விதிமீறலுக்கான தண்டனை சட்டங்கள்

- மதம், இனம், பிறந்த இடம், இருப்பிடம், மொழி ஆகியவற்றை கொண்டு பல்வேறு பிரிவுகளுக்கு இடையே மோதலை உருவாக்குதல், மத நல்லிணக்கத்தை சீர்குலைத்தல், இவற்றுக்கு இபிகோ 153 ஏ - சட்டத்தின் படி 5 ஆண்டுகள் வரை அல்லது அபராதமும் விதிக்க சட்டத்தில் இடம் உண்டு.
- பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அறிக்கைகளை வெளியிடுதல், வெறுப்பூட்டும் வகையில் நடத்து கொள்ளுதல் அல்லது இது தொடர்பான கருத்துக்களை அச்சடித்தல் அல்லது மக்களிடையே புழக்கத்தில் விடுதல் ஆகியவற்றுக்கு இபிகோ 505(2) சட்டத்தின் கீழ் 3 ஆண்டுகள் வரை தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும்.
- வேட்பாளரின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் இல்லாமல் பொதுக்கூட்டத்தை நடத்துதல் அல்லது விளம்பரம் செய்தால் ஆகியவற்றுக்கான செலவுகளை வேட்பாளர் ஏற்க வேண்டும். அல்லது வேட்பாளரை மக்களிடம் பிரபலப்படுத்தும் வகையில் பிரசுரங்களை அச்சடித்தல் ஆகியவை இபிகோ 171எச் சட்டத்தின் கீழ் தண்டனையுடன் ரூ.500 வரை அபராதம் விதிக்கப்படும்.
- 1951 மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 125 சட்டத்தின் படி தேர்தல் தொடர்பாக இரண்டு பிரிவுகளுக்கு இடையே மோதலை உருவாக்கினால் 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அபராதம் விதிக்கப்படும்.

5 years Jail for MCC violation

தினகரன்

5 APR 2024

வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒப்புதலுக்கு விதிகள் வகுக்க கோரி

# திமுக தொடர்ந்த வழக்கில் தங்களை இணைக்க காங்கிரஸ் மனு

## உயர் நீதிமன்றத்தில் விரைவில் விசாரணை

**சென்னை, ஏப். 5:** வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பான விதிமுறைகளை வகுக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி திமுக சார்பில் தொடரப்பட்டுள்ள வழக்கில் தங்களையும் இணைக்க கோரி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.



சென்னை உயர் நீதிமன்றத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

கடந்த 1950 முதல் 1990 வரை தேர்தல்களில் வாக்குச்சீட்டு நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. அதன் பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சமீப காலமாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஒப்புகைச் சீட்டு இயந்திரங்கள் பயன்பாடு குறித்து சமூகத்தின் அனைத்து பிரிவினரும் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். பதிவான வாக்குக்கும், எண்ணப்பட்ட வாக்குக்கும் இடையில் குறைபாடுகள் இருப்பதை ஒரு போதும் ஏற்க முடியாது. தேர்தலை நியாயமான முறையில் நடத்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் முறையாக, வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் ஒப்புகைச் சீட்டு இயந்திரத்தை இணைப்பது தேர்தல் ஆணைய விதிகளுக்கு முரணானது.

வாக்குப்பதிவு இயந்திரத்தின் கட்டுப்பாட்டு இயந்திரத்துக்கும், வாக்குப்பதிவு இயந்திரத்துக்கும் இடையில் அச்சு இயந்திரங்கள் வைக்க எந்த விதிகளும் வகை செய்யவில்லை. அவ்வாறு வைப்பது முறைகேடுகளுக்கு வழிவகுக்கும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நிபுணர்களை வைத்து சோதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்த நடவடிக்கைகளை பொது மக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் பார்க்க முடிவதில்லை. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு ஒப்புதல் வழங்க உரிய விதிகளை வகுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.

வாக்குப்பதிவு இயந்திரத்துக்கும், கட்டுப்பாட்டு இயந்திரத்துக்கும் இடையில் அச்சு இயந்திரத்தை வைக்க கூடாது என்று உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்த மனு இன்று விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், திமுக தொடர்ந்துள்ள வழக்கில் தங்களையும் இணைக்க கோரி தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை சார்பில் வக்கீல்கள் ஏ.பி.சூரியபிரகாசம், விக்டர் ஆகியோர் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவும் இன்று விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

News regarding case filed by Dmk for Evm
Congress willing to join with Dmk party.

தினகரன்

5 APR 2024

### வேட்பாளர்களிடமிருந்து வாக்களிக்க

# பணம் பெற்றது நிரூபிக்கப்பட்டால் வாக்காளர்கள் மீதும் நடவடிக்கை

## தலைமை தேர்தல் அதிகாரி எச்சரிக்கை

### இதுவரை 13 லட்சம் பேருக்கு பூத் சிலிப்

கடந்த 1ம் தேதியில் இருந்து இதுவரை 13 லட்சம் பேருக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பூத் சிலிப் 13ம் தேதிக்குள் வழங்கப்பட்டு விடும்" என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்தார்.

சென்னை, ஏப். 5: பொது மக்களுக்கு வேட்பாளர்கள் வர்க்களிக்க பணம் கொடுப்பதும் குற்றம், பொதுமக்களும் வாக்களிக்க வேட்பாளர்களிடம் பணம் பெறுவது நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை தேர்தல் அதிகாரி எச்சரிக்கை விடுத்தார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு சென்னை, தலைமைசெயலகத்தில் நேற்று அளித்த பேட்டி:

வேட்பாளர்கள் தவிர தனியார் திருமண நிகழ்ச்சிகள் உள்ளிட்ட விழாக்கள் மண்டபங்களில் நடத்தலாம். ஆனால் அங்கு நேரில் வந்து மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் போலீசார் விசாரணை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக தலைமை செயலாளர், டிஜிபி உள்ளிட்ட அதிகாரிகளுடன் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் நேற்று முன்தினம் வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆலோசனை நடத்தினார். அப்போது, தேர்தல் முன்னேற்பாடுகள், பக்கத்து மாநிலங்களுடன் தகவல்களை பகிர்ந்து கொள்வது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

சி-விஜில் ஆப் மூலம் பொதுமக்கள் புகார் அளிக்க முன் வர வேண்டும். வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது, சுவர் விளம்பரம், 10 மணிக்கு மேல் பிரசாரம் உள்ளிட்ட தகவல்களை இந்த ஆப் மூலம் நேரடியாக புகார் கொடுக்க முடியும். அதிகபட்சமாக கேரள மாநிலத்தில் கடந்த 3ம் தேதி வரை 71,168 புகார்களும், கர்நாடகாவில் 13,959, ஆந்திராவில் 7,055 புகார்களும் சி-விஜில் மூலம் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2,168 புகார்கள் மட்டுமே வந்துள்ளது. தமிழக மக்களிடம் சி-விஜில் பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டும். புகார் தெரிவித்த 100 நிமிடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

வேட்பாளர்கள் வாக்களிக்க பொது மக்களுக்கு பணம் கொடுப்பது குற்றம். அதேபோன்று, பொது மக்களும் வாக்களிக்க வேட்பாளர்களிடம் பணம் பெறுவதும் குற்றம். இதுபற்றி சி-விஜில் ஆப் மூலம் புகார் அளித்தால் தேர்தல் விதிப்படி நடவடிக்கை எடுக்கப்படும். யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்து கொள்ளும் இயந்திரமான விவி-பேட் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் பயன்படுத்தப்படும். ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 5 வாக்குச்சாவடி மையங்களில் உள்ள விவி-பேட் இயந்திரத்தில் உள்ள வாக்குகளை ரேண்டம் முறையில் தேர்வு செய்து எண்ணப்படும். இதில் பதிவாகும் வாக்குகளை 5 வருடம் வரை பாதுகாப்பாக வைக்க முடியும். மற்றபடி, வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள வாக்குகளை 45 நாட்கள் பாதுகாப்பாக வைக்கப்படும். அதற்குள் புகார் தெரிவிக்கலாம். நீதிமன்ற வழக்கு இருக்கும் பட்சத்தில், அந்த வழக்கு முடியும் வரை வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் பாதுகாப்பாக வைக்கப்படும்.


இவ்வாறு அவர் கூறினார்.

Strict action will be taken if the voters get money for vote

தினமணி

- 5 APR 2024

# எடப்பாடி கே.பழனிசாமி வாகனத்தில் பறக்கும் படையினர் சோதனை



எடப்பாடி கே.பழனிசாமி காரை சோதனையிடும் பறக்கும் படை அலுவலர்கள்.

**உதகை, ஏப். 4:** மக்களவைத் தேர்தல் பிரசாரத்துக்காக உதகைக்கு வந்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியின் வாகனத்தை தேர்தல் பறக்கும் படையினர் சோதனையிட்டனர்.

நீலகிரி மக்களவைத் தொகுதி அதிமுக வேட்பாளர் லோகேஷ் தமிழ்ச்செல்வனை ஆதரித்து வாக்கு சேகரிப்பதற்காக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி உதகைக்கு காரில் வியாழக்கிழமை வந்து கொண்டிருந்தார்.

குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் காட்டேரி அருகே வந்தபோது, அவரது வாகனத்தை தேர்தல் பறக்கும் படையினர் நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். இதில் காரில் பணமோ, விலை உயர்ந்த பொருள்களோ இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் நீலகிரிக்குள் பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில் பயன்படுத்த தடை என்பதால், காரில் இருந்த ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டிலை மட்டும் பறிமுதல் செய்துவிட்டு அவரை உதகைக்குள் அனுமதித்தனர்.

கடந்த வாரம் ஆ.ராசாவின் வாகனத்தை முறையாக சோதனை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டில் தேர்தல் பறக்கும் படை அலுவலர் கீதா பணியிடை நீக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

News regarding Dep surveillance in ADMK person's car

தினகரன்

5 APR 2024

# பதற்றமான வாக்குச்சாவடியில் சிசிடிவி மூலம் வீடியோ பதிவு



**உள்துறை செயலருக்கு கடிதம்**

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு உள்துறை செயலாளர் அமுதாவுக்கு எழுதிய கடிதம்: எந்த பிரச்னைகளும் இல்லாமல் நேர்மையான முறையில் தேர்தலை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அதன்படி பிரச்னைக்குரிய இடங்களை கண்டறியவும், பதற்றமான வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பான முறையில் தேர்தலை நடத்தவும், வாக்காளர்கள் பாதுகாப்பாகவும், தவறாக திசைமாற்றப்படாமல் இருக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் அதிகளவில் மத்திய ஆயுதப்படை காவல் படை வீரர்களை களமிறக்க வேண்டும். . வாக்குச்சாவடிகளில் சிசிடிவி கேமராக்கள் மூலம் முழுமையாக காட்சிப்பதிவு செய்து, அதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். வாக்குச்சாவடியை சுற்றி நடக்கும் முக்கிய விஷயங்களையும் விடியோ பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தேர்தல் நுண்பார்வையாளர்களை பணியமர்த்த வேண்டும்.

CCtv cemara will on at Vulnerable polling Booth.

தினமணி

5 APR 2024

# ஆவணம் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.5 லட்சம் தங்க நகைகள் பறிமுதல்

**சென்னை,ஏப்.4:** சென்னை காசிமேட்டில் ஆவணம் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.5 லட்சம் தங்கநகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

காசிமேடு, கும்மாளம்மன் கோயில் தெரு அருகே பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த மணலி சின்னசேக்காடு கண்ணன் தெருவைச் சேர்ந்த ஜா. ராஜாசிங் (35) என்பவரை வழிமறித்து சோதனையிட்டனர்.

அப்போது அவர் வைத்திருந்த ரூ.5 லட்சம் மதிப்புள்ள தங்கநகைகளுக்குரிய ஆவணங்களை கேட்டனர்.

ஆனால் அவரிடம் ஆவணங்கள் எதுவும் இல்லாததால், நகையை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். மேலும் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

5 lakhs were seized by flying squad

தினமணி
5 APR 2024

# மிக மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளிடம் வீட்டுக்குச் சென்று வாக்கு பெறும் முறை தொடக்கம்

**சென்னை, ஏப். 4:** தமிழகத்தில் 85 வயதைக் கடந்த மிக மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளி வாக்காளர்களிடம் வீட்டுக்குச் சென்று தபால்வாக்கு பெறும் நடைமுறை வியாழக்கிழமை தொடங்கியது.

ஈரோடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகளுடன் வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகள் பெறப்பட்டன.

வாக்குப் பதிவு நாளான ஏப். 19-ஆம் தேதிக்கு முந்தைய தினம் (ஏப். 18) வரை வாக்கு பெறும் பணி நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

தேர்தலில் எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில் தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி, 85 வயதைக் கடந்த மிக மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் வாக்குகளை வீடுகளுக்கே சென்று பெறும் திட்டத்தை தேர்தல் ஆணையம் தொடங்கியது.

இதற்கென '12டி' எனும் படிவம் விநியோகம் செய்யப்பட்டது. இந்தப் படிவங்களை அளிக்க மார்ச் 20-ஆம் தேதி தொடங்கி 25-ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது.




ஈரோடு வீரப்பன்சத்திரம் பகுதியில் தனது வீட்டில் தபால் வாக்கு செலுத்திய மூதாட்டி.

**மொத்தம் எத்தனை பேர்?:** தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 6.08 லட்சம் பேர் உள்ளனர். அவர்களில் 4.30 லட்சம் பேருக்கு 12டி படிவம் விநியோகிக்கப்பட்டுள்ளன. அவர்களில் 77,445 பேர் மட்டுமே படிவங்களைப் பூர்த்தி செய்து அளித்தனர்.

இதேபோன்று, மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் 4.61 லட்சம் பேர் உள்ளனர். படிவத்தைப் பெற்றவர்களில் 50,676 பேர் மட்டுமே பூர்த்தி செய்து அளித்துள்ளனர்.

12டி படிவத்தை நிரப்பித் தந்தவர்களின் வீடுகளுக்கே சென்று தபால் வாக்குகளை அளித்து அதைப் பெறும் நடைமுறை தொடங்கியுள்ளது. திருச்சி, ஈரோடு மாவட்டங்களில் வியாழக்கிழமை அந்தப் பணிகள் தொடங்கின.

இது குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: 12டி படிவங்களை அளித்தவர்களின் வீடுகளுக்கு வாக்குப் பெட்டியுடன் வாக்குச் சாவடி அலுவலர்கள் நேரில் சென்று வாக்குகளைப் பெறுவார்கள். முதல் முறை செல்லும்போது, வீட்டில் யாரும் இல்லாவிட்டால் மீண்டும் ஒருமுறை செல்வார்கள். அப்போதும் வீடு பூட்டப்பட்டிருந்தால் கூடுதல் வாய்ப்பு அளிக்கப்படாது. வாக்குப் பதிவுக்கு முந்தைய தினமான ஏப். 18-ஆம் தேதிக்குள் இந்த நடைமுறை முடிக்கப்படும் என்றார்.

**சென்னையில் ஏப்.8 முதல்...:** சென்னையில் 85 வயது முதியவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடிச் சென்று வாக்கு பெறும் திட்டம் ஏப்.8-இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் மாற்றுத்திறனாளிகள் 11,369 பேர், 85 வயதுக்கு மேற்பட்டோர் 63,751 பேர் வாக்காளர்களாக உள்ளனர். மொத்தம் 75,120 பேர் தபால் மூலம் வாக்களிக்கும் தகுதி பெற்றவர்கள். இவர்களின் வீடுகளுக்கே சென்று வாக்கை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

News regarding postal vote.

தினமணி

- 5 APR 2024

# வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்

## தமிழக அரசுக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி கடிதம்

**சென்னை, ஏப். 4:** வாக்குச்சாவடிகளில் குடிநீர், நிழலுக்கான பந்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தமிழக அரசுக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து, ஊரகவளர்ச்சி, ஊராட்சி, பொதுப்பணிகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் செயலர்கள், அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு வியாழக்கிழமை அவர் எழுதியுள்ள கடிதம்:

மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு ஏப்.19-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்காக அமைக்கப்படவுள்ள வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் உள்பட வாக்காளர்களுக்குத் தேவையான இதர வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

**என்னென்ன வசதிகள்?** வாக்குச்சாவடிகளில் 7 வகையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருவது அவசியமாகும். வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை வாக்காளர்கள் தெரிந்துகொள்ள உதவி அலுவலர்களை நியமிப்பது, குடிநீர், கழிப்பறை வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதி, மின்வசதி, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் கோரிய போதிய உட்கட்டமைப்பு வசதிகள், வாக்குச்சாவடி நிகழ்வுகளை நேரலை செய்ய தேவையான வச்திகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வாக்குச்சாவடி எண், வாக்குச்சாவடியில் இருந்து 200 மீட்டர் தொலைவைக் குறிக்கும் குறியீடுகளை வரைவது, குடிநீர் வசதி போன்றவற்றை ஏற்படுத்த கடந்த தேர்தல்களில் ஒரு வாக்குச்சாவடிக்கு ரூ.1,300 வழங்கப்பட்டது.

இந்தத் தேர்தலில் அவற்றுக்குத் தேவைப்படும் நிதியை 'இதர செலவுகளில்' எனும் பிரிவில் இருந்து ஊழியர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் அதிக அளவு பொதுமக்கள் வந்து வாக்களிப்பர் என்பதால், அவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

அத்துடன், வாக்குச்சாவடிகளில் போதுமான இருக்கைகள், மேசைகள் அமைக்க வேண்டும். குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம், கடுமையான கோடை காலத்திலும் வாக்காளர்கள் எளிதாக வந்து தங்களது வாக்குகளைச் செலுத்த வழி ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

News regarding basic needs at polling Booth.

முரசொலி

5 APR 2024

# பூத் சிலிப்பை அடையாள அட்டையாக பயன்படுத்த முடியாது! தேர்தல் ஆணையம் தகவல்!

சென்னை, ஏப். 5 –

தேர்தலுக்கு 5 நாட்கள் முன் ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் பூத் சிலிப் வழங்கும் பணியை தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும். இந்த பூத் ஸ்லீப்பில் வாக்காளர் பெயர், வாக்காளர் பட்டியலில் உள்ள வரிசை எண், வாக்குச்சாவடி விவரம் உள்ளிட்டவை இடம்பெற்றிருக்கும். தற்போது வாக்காளரின் புகைப்படமும் பூத் ஸ்லீப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆனால், இதனை வாக்காளர் அடையாள அட்டையாக பயன்படுத்த முடியாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் ஏற்கனவே தேர்தல் ஆணையம் கூறியுள்ள ஆதார் அட்டை உள்ளிட்ட 12 ஆவணங்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

EC informs that we cant use booth slips as for vote.

தினகரன்

5 APR 2024

# தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை




சென்னை தலைமை செயலகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள், சட்டம்-ஒழுங்கு, செலவினங்கள் கண்காணிப்பு மற்றும் வாக்குப்பதிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு, சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல் கண்காணிப்பாளர்களுடன் காணொலி காட்சி வாயிலாக நேற்று ஆலோசனை நடத்தினர். இதில், தலைமை தேர்தல் அலுவலர் சங்கர்லால் குமாவத், இணை தலைமை தேர்தல் அலுவலர் ஸ்ரீகாந்த் கலந்துகொண்டனர்.

CEO, TN conduct a meeting with Election officers regarding upcoming elections. 2024.

தினமணி

- 5 APR 2024

# தமிழகத்தில் 8,231 வாக்குச் சாவடிகள் பதற்றமானவை

## தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு




மக்களவைத் தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்தல் தொடர்பாக உயர் அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்ட தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு, சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளர் பி.ஆர்.பாலகிருஷ்ணன். உடன் கூடுதல் தலைமைத் தேர்தல் அலுவலர் சங்கர் லால் குமாவத், இணை தலைமைத் தேர்தல் அலுவலர் எச்.எஸ்.ஸ்ரீகாந்த்.

**சென்னை, ஏப். 4:** தமிழகத்தில் 8 ஆயிரத்து 231 வாக்குச் சாவடிகள் பதற்றமானவையாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார். இந்த வாக்குச் சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

மக்களவைத் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் அவர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

மக்களவைத் தேர்தலுக்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தலைமையில் காணொலி வழியாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாநிலத்தில் தேர்தலுக்காக செய்யப்பட்டுள்ள பொதுவான ஏற்பாடுகள் குறித்து தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, உள்துறை செயலர் பி.அமுதா உள்ளிட்ட அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை எப்போதும் சிறப்பாகவே பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனால்தான் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது. ஆனால் பணம், பரிசுப் பொருள்கள் ஆகியன அதிகளவு புழங்குகிறது. இதனைக் கட்டுப்படுத்தவே கண்காணிப்புக் குழுக்களை அதிகரித்துள்ளோம்.

**பதற்றமான வாக்குச் சாவடிகள்:** வாக்காளர்களை அச்சுறுத்துவது, வாக்குக்கு பணம் கொடுத்து கவர்வது போன்ற செயல்கள் நடைபெறும் பகுதிகளை உள்ளடக்கிய வாக்குச் சாவடிகள் பதற்றமான வாக்குச் சாவடிகளாக தேர்தல் ஆணையத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன. தமிழகத்தில் இந்த மக்களவைத் தேர்தலில் 8 ஆயிரத்து 50 வாக்குச் சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், வாக்காளர்கள் வாக்களிக்க வராமல் இருப்பது வன்முறைகள் போன்ற நிகழ்வுகள் நடைபெறும் பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகள் அதிக பதற்றமான வாக்குச் சாவடிகளாக அறியப்படுகின்றன.


அந்த வகையில், இந்தத் தேர்தலில் 181 வாக்குச் சாவடிகள் அதிக பதற்றமான வாக்குச் சாவடிகளாக இருக்கும் என அறியப்பட்டுள்ளன. இந்த வாக்குச் சாவடிகளுக்கு கூடுதலான பாதுகாப்பு அளிக்கப்படும்.

**பூத் சிலிப்:** தமிழகம் முழுவதும் வாக்காளர்களுக்கு வாக்குச் சாவடி தகவல் சீட்டு (பூத் சிலிப்) வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. கடந்த 1-ஆம் தேதி முதல் இதுவரை 13 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஏப். 11 வரை வாக்குச் சாவடி சீட்டுகள் தொடர்ந்து வழங்கப்படும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

News regarding 8,231 Vulnerable booths.

தினகரன்

5 APR 2024





**சென்னை, ஏப்.5:** தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து நடிகர், நடிகைகளை வைத்து விழிப்புணர்வு நிகழச்சிகள் நடத்தப்படும். அதேபோன்று, தேர்தலில் பணம் வாங்காமல் வாக்களிக்க வேண்டும் என்பது குறித்தும் விளம்பர படங்கள் வெளியாகும். தற்போது நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் பெரிய அளவில் நடிகர், நடிகைகள், விளையாட்டு வீரர்கள் பங்கேற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படவில்லை. திரைப்பட நடிகர் விஜய் சேதுபதி மட்டும் கண்டிப்பாக அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று கூறிய செய்தி தேர்தல் ஆணையம் சார்பில் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு, "உன் உரிமை, உன் கடமை" என்ற தலைப்பில் தனது சொந்த குரல் தமிழில் பாடிய பாடலை நேற்று வெளியிட்டு உள்ளார். இந்த பாடலுக்கு ஸ்ரீகாந்த் தேவா இசை அமைத்துள்ளார்.

அதில், "சிறகை விரித்து பறக்கும் பறவை இனம் போல, 18 வயது தொட்டால் துள்ளிக் குதிக்கும் மனமே, ஓ... உன் உரிமை காட்டிடும் வயது இது கேளாய், உன் கடமை செய்திடும் வயது இது கேளாய், உன் கடமை செய்திடும் நேரம் இது பாராய், முதல் மை வைத்து நீ நாட்டுக்காக வாக்களி.... 100 சதவீதம் வாக்களிப்போம் தேர்தலை திருவிழாவாய் மாற்றுவோம்" என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு அழகான தமிழில் பாடியுள்ளார். சத்யபிரதா சாகு ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர். அவருக்கு தமிழ் சரளமாக பேச வராது. ஆனால், கடுமையான பயிற்சிக்கு பிறகு தேர்தல் விழிப்புணர்வுக்கான பாடலை அழகான தமிழ் உச்சரிப்புடன் பாடியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. நேற்று இந்த பாடல் சமூகவலைதளங்களில் வைரலானது.

CEO, T.N. Sang a Song for election awareness

இந்து தமிழ் திசை
5 APR 2024



↑ மக்களவைத் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி, கோவளம் நீலக்கொடி கடலில் அலைச்சறுக்கு வீரர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

படம்: எம்.முத்துகணேஷ்

awareness for 100%. Voting by fisherman.

தினமணி

5 APR 2024

## விழிப்புணர்வு...





மக்களவைத் தேர்தலை முன்னிட்டு கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் வாக்காளர் விழிப்புணர்வு பிரசாரத்தில் வியாழக்கிழமை ஈடுபட்ட வண்டலூர் கிரசென்ட் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்களுடன் பதிவாளர் என் .ராஜா உசேன், வண்டலூர் வட்டாட்சியர் ஆர்.ராஜேந்திரன், கிளாம்பாக்கம் காவல்துறை ஆய்வாளர் அல்வின் ராஜ், நாட்டு நலத்திட்டப்பணி ஒருங்கிணைப்பாளர் அயூப்கான் தாவுத் , பேராசிரியர்கள் கலிலுதீன், சீனிவாசன்.

Awareness program at Kilambakkam New bus stand by collector.

தினமணி

5 APR 2024

## 'விழிப்புணர்வு' அலங்கார ஊர்தி...



மக்களவைத் தேர்தலையொட்டி, ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கர்நாடக மாநிலம் ஹுப்பள்ளியில் வலம் வந்த தேர்தல் ஆணையத்தின் அலங்கார ஊர்தி.

Awareness van by EC Tamil Nadu.